கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!!

BPT Church
Malavilai

இரட்சிப்பின் நற்செய்தி

டிசம்பர் மாத இதழ்

இயேசுவை பணிந்துக்கொள்

பிதாவாகிய அவருக்கு மகிமையாக
இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும்
அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும்
மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.
(பிலிப்பியர் 2:11)

தனி பிரதி 15/-
ஆண்டு சந்தா 150/-

PRAISE THE LORD! ALLELUIA!!

BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH

HEAD QUATERS : MALAVILAI

Regd.no. : 1308/1977

Malavilai Prayer House, Adhi Penthecosthe Sathya Sabhai Malavilai Salai,
Cheruppalur(P.O),PIN629161 KanniyakumariDist.,TamilNadu,India.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் அடியானின் அன்பின் வாழ்த்துக்கள்!

நித்திய ஒளியில் நம்மை வழிநடத்தவும், நித்திய அன்பினாலும், இரக்கத்தினாலும் இந்த உலகத்திற்குத் தம் ஒரே பேரான குமாரனை அளித்த சர்வவல்ல பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்!

விசுவாசத்திலும், ஜெபத்திலும், தாராளமான ஆதரவிலும் எங்களோடு தோளோடு தோள் நின்று இந்த ஊழியத்தில் பங்கெடுக்கும் அனைத்து அன்பு விசுவாசிகளுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, ...கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும்..." (எபேசியர் 3:17-19)

பிரியமானவர்களே, ஆசீர்வாதமான இந்த டிசம்பர் மாதத்தில், இயேசு பாலனாகப் பிறந்த அந்தப் பரிசுத்த நாளுக்காக நாம் காத்திருக்கிறோம். பெத்லகேமில் (Bethlehem) மட்டுமன்றி, நம் ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் கிறிஸ்து பிறந்தால்தான், நாம் அவர் நமக்களித்த இரட்சிப்பின் உண்மையான பொருளை உணர்ந்து கொள்ள முடியும். மேலும், நம்முடைய பழைய சுபாவங்கள் யாவும் நீங்கி, கிறிஸ்துவைப்போன்ற புதிய சுபாவம் நமக்குள் உருவாகும்படிக்கு, அவரே நம் உள்ளத்தில் வந்து வாசம் பண்ணும்படி நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்.

அவருடைய பிறப்பு வெறும் வருடாந்திர கொண்டாட்டம் அல்ல; அது ஒவ்வொரு நாளும் நம் வாழ்வில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் மாற்றத்திற்கான அழைப்பு! இந்த அற்புத மாதத்தில் இயேசு கிறிஸ்துவின் சுபாவம் நமக்குள் பிறக்க நாம் ஜெபிப்போம்.

தேவனுடைய அளவற்ற கிருபையில் நாம் நிலைத்திருந்து, அன்பிலும், ஒளியிலும், விசுவாசத்தில் உறுதியாக நின்று, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ கர்த்தர் தாமே உங்களுக்குத் துணை செய்வாராக. தேவ ஆவியானவர் நம் ஒவ்வொருவரையும் கிறிஸ்துவின் சாயலாய் மாற்றி, நித்திய ஒளியில் வழிநடத்தி, அவருடைய அன்பின் வெற்றியையும் ஜெயத்தையும் தருவாராக.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்!

கிறிஸ்துவின் பணியில்,
இயேசுவின் ஊழியன்.

ஆசிரியர் உரை.....

உள்ளே...

» தேவ செய்தி	4
» பரிசுத்த வேதாகமம்	9
» குடும்பப் பகுதி	11
» பெண்கள் பகுதி	13
» அனுதினமும் கிறிஸ்துவுக்குள்	15
» சிறுவர் பகுதி	16
» கேள்வி-பதில் பகுதி	18
» வாலிபர் பகுதி	20
» இரத்தசாட்சி பகுதி	22
» சாட்சி பகுதி	24
» ஜெபிப்போம்	25
» ஓராண்டில் வேதாகமம்	26

அன்பு வாசகர்களே,

டிசம்பர் மாத இதழ் மூலமாக உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. வானம் பூமி போற்றும் மகா இன்பமான இந்தப் பண்டிகைக் காலத்தில் நாம் அடியெடுத்து வைக்கிறோம். நமது இல்லங்கள், தெருக்கள் என எங்கு நோக்கினும் வண்ணமயமான அலங்காரங்களும், ஒளி வெள்ளமும், மகிழ்ச்சியின் சத்தங்களும் நிரம்பி வழிகின்றன.

இந்த உலகளாவிய கொண்டாட்டங்களைப் பார்க்கும்போது, இதில் ஒரு ஆழமான சத்தியம் அடங்கியிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். நாம் இப்போது அனுபவிக்கும் இந்த மகிழ்ச்சியான பண்டிகைக் கொண்டாட்டங்களும், அலங்காரங்களின் பிரகாசமும், வரவிருக்கும் நித்திய ஆனந்தத்திற்கும், நித்திய வெளிச்சத்துக்கும் ஒரு சாயல் ஆகும். ஆம், கிறிஸ்து நம்மோடு வாசம் செய்யப்போகும் அந்த மகிமையின் பிரசன்னத்திற்கு இந்த மண்ணில் நாம் காணும் வெளிச்சங்கள் வெறும் நிழல்களே.

அன்பான குடும்பங்களே,

கிறிஸ்துமஸ் என்பது வெறுமனே பரிசுகளைப் பரிமாறிக்கொள்வதோ, விருந்து ஏற்பாடு செய்வதோ மட்டுமல்ல. தேவன் நம்மோடு இருக்க விரும்பினார் என்பதன் அடையாளமே இது. குடும்பமாக கிறிஸ்துவை மையப்படுத்தி ஜெபியுங்கள்; உங்கள் உறவுகளுக்குள் தேவ அன்பு பிரகாசிக்கட்டும். கர்த்தராகிய இயேசுவின் பிறப்பு, உங்கள் குடும்பத்தை ஆவிக்குரிய பலத்தால் நிரப்பட்டும்.

அலங்காரங்களில் இருக்கும் தற்காலிகப் பிரகாசத்தைவிட, கிறிஸ்துவே நித்திய நம்பிக்கை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவருடைய பிறப்பின் உண்மையான மகிழ்ச்சி வெளிப்புறப் பொருட்களில் இல்லை, மாறாக நம் இருதயத்தில் அவர் உதிப்பதே ஆகும். கிறிஸ்துவே நித்திய ஜீவனுக்கான சாயலை நமக்கு வெளிப்படுத்தியவர். இந்த மாதத்தில், உங்கள் விசுவாசத்தை இன்னும் உறுதியாக்க கர்த்தர் உங்களுக்கு உதவுவாராக.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையினால் வரும் ஆசீர்வாதங்களால் நீங்கள் நிரம்பவும், அவர் தரும் நித்திய சந்தோஷத்தின் சாயலை உங்கள் வாழ்க்கையில் முழுமையாக அனுபவிக்கவும் கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

கர்த்தரின் ஆசீர்வாதங்கள் உங்களோடு கூட இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்

V. ஜாண் கிங்ஸ்லி

‘‘நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் ஞ்.. முழங்காற் படியிடக் கடவோம் வாருங்கள்’’. (சங்கீதம் 95:6)

தேவ செய்தி

இயேசுவை பணிந்துகொள்

கர்த்தரின் நாமத்திற்குக் கீழ்ப்படிதலும் மகிமையும்

நமது டிசம்பர் மாதம் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியால் நிறைந்திருக்க, நம் இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் மகத்துவத்தையும், அவரை நாம் எப்படிக் கனம் பண்ண வேண்டும் என்பதையும் ஆழமாகச் சிந்திப்போம். இயேசுவே பரலோகத்தின் சர்வவல்லமையுள்ள தேவன் என்று இருதயத்தில் விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டு, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவருக்குரிய மகிமையையும், ஆராதனையையும், கீழ்ப்படிதலையும் செலுத்துவதே உண்மையான பணிந்துகொள்ளுதல் ஆகும்.

“பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” பிலிப்பியர் 2:11

“நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற் படியிடக்கடவோம் வாருங்கள்” சங்கீதம் 95:6

அவரைக் கர்த்தர் என்று விசுவாசித்து, பணிந்து கொள்ளுவது நம் ஒவ்வொரு கிறிஸ்தவரின் அத்தியாவசிய கடமை மட்டுமல்ல, அதுவே நமது வாழ்க்கையின் ஆசீர்வாதத்தின் திறவுகோலும் ஆகும். வெறுமனே சரீரத்தால் தலைவணங்குவது பணிந்துகொள்ளுதல் அல்ல. அது பயத்தோடும், தாழ்மையான சிந்தையோடும், முழு அர்ப்பணிப்போடும், முழு உள்ளத்தோடும் நமது இரட்சகரைத் தொழுது கொள்ளும் ஆவியின் கிரியை ஆகும். இந்த டிசம்பர் மாதம், இயேசுவின் பிறப்பின் சூழலில், அவரை உண்மையாகப் பணிந்து கொண்டவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து, நாமும் எப்படி ஆழமான கீழ்ப்படிதலையும் அர்ப்பணிப்பையும் அவரிடம் கொடுக்கலாம் என்று சிந்திப்போம்.

1. பணிந்துகொள்ளுதலின் மகத்துவம்:

எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்

நாம் இயேசுவைப் பணிந்துகொள்ளுதல் என்பது, அவருடைய தெய்வீக அதிகாரத்தை முழுமையாக அங்கீகரிப்பதாகும். ஏன் இயேசுவுக்கு நாம் பணிந்து

குனிந்து முழங்காற் படியிட வேண்டும்? இதற்கான பதிலை அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் தெளிவாக விளக்குகிறார்: இயேசு, சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்ததினால், பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார். அவருக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக் கொடுத்தார்.

மேலும், பிலிப்பியர் 2:10ன் படி, “பரலோகத்திலுள்ளோர், பூலோகத்திலுள்ளோர், பூமிக்கடியிலுள்ளோர் அனைவரும் இயேசுவின் நாமத்திற்குக் கீழ்ப்படிந்து முழங்காற்படியிடும்படிக்கு” அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. நாம் முழங்காற்படியிடுவது ஒரு விருப்பத்தேர்வு அல்ல, மாறாக, அது நாம் வாழும் சிருஷ்டிப்பின் கட்டாயமாகும். தேவனை பணிந்துக் கொள்ளுதல் என்பதைக் குறித்து தேவன் வைத்திருக்கும் முதன்மையான கட்டளையானது: அது அவருக்கு மாத்திரமே உரியது. வேறு எவரையும், வேறு எதனையும் ஆராதிக்கக் கூடாது. இயேசு சாத்தானுக்குப் பதிலளித்தபோது இதை உறுதிப்படுத்தினார்:

“உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாகஎன்று எழுதியிருக்கிறதே என்றார்.” மத்தேயு 4:10

உலகத்திலுள்ள சகல ஜனங்களும் கர்த்தரையே பணிந்துகொண்டு அவருடைய **நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாகும்:**

“ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்துகொண்டு, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள” சங்கீதம் 86:9

பணிந்துகொள்ளுதலின் ஆழமான பொருள்கள்

• கர்த்தர் என்று அறிக்கை செய்தல்: ‘இயேசுவே கர்த்தர’ என்று சொல்வது, அவரே என் வாழ்வின் எஜமானர், என் முடிவுகளின் அதிகாரி, என் எதிர்காலத்தின் நடத்துநர் என்று பிரகடனம் செய்வதாகும்.

• பயத்தோடும் தாழ்மையோடும்: நாம் பணிந்து நிற்பது சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக. நம்முடைய சொந்த ஞானத்தையோ, பலத்தையோ நம்பாமல், அவருடைய மகத்துவத்திற்கு; முன்பாக நம்மைத் தாழ்த்திக் கொள்வதே சரியான பணிந்துகொள்ளுதல்.

• முழு உள்ளத்தோடு அர்ப்பணம்: நம்முடைய முழு இருதயம், ஆத்துமா, சித்தம், உணர்வுகள் யாவற்றையும் அவருக்குக் கொடுத்து, அவருடைய கரங்களில் நம்மை முழுவதுமாக ஒப்புவிப்பதாகும்.

2. இயேசுவைப் பணிந்தோர்: அதிகாரம் அங்கீகரிக்கப்பட்ட தருணங்கள்

இயேசுவைப் பணிந்துகொள்ளுதல் என்பது புதிய ஏற்பாட்டில், அவருடைய தெய்வீக அதிகாரத்தை மக்கள் அங்கீகரித்த ஒவ்வொரு இடத்திலும் வெளிப்பட்டது. சிலுவையின் வெற்றிக்குப் பின்னரும், அவருடைய வல்லமையைக் கண்ட போதும் மக்கள் பணிந்தனர்.

தூதர்களின் செய்தியை விசுவாசித்த மேய்ப்பர்கள்: (லூக்கா 2:820)

மாட்டுத் தொழுவத்தில் இரட்சகர் பிறந்தார் என்ற தேவ தூதனின் செய்தியை மேய்ப்பர்கள கேட்டபோது, அவர்கள் சந்தேகப்படவில்லை, காலந்தாழ்த்தவில்லை, தர்க்கம் செய்யவில்லை. மாறாக, “நாம் பெத்லகேம்

பட்டணமட்டும் போய், நடந்ததாகச் சொல்லப்பட்ட இந்தக் காரியத்தைக் கர்த்தர் நமக்கு அறிவித்தபடியே பார்ப்போம் வாருங்கள்” என்று சொல்லி, தீவிரமாய் சென்றார்கள்.

மேய்ப்பர்களின் பணிந்துகொள்ளுதலின் தனிச்சிறப்பு:

1. விசுவாசத்தின் தீவிரம்: அவர்கள் ஒரு சாதாரண குழந்தையைத் தேடிச் செல்லவில்லை; உலக இரட்சகரைத் தேடிச் சென்றார்கள். அவர்கள் கண்டது ஒரு தாழ்மையான காட்சியே என்றாலும், தேவ தூதன் அறிவித்த செய்தியை முழுமையாக விசுவாசித்தனர்.
2. கீழ்ப்படிதலின் விரைவு: அறிவிப்பை கேட்ட மறு நொடியே, எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, கிறிஸ்துவைப் பார்க்க விரைந்தார்கள். கீழ்ப்படிதலில் காலந்தாழ்த்துதல் இல்லை.
3. மகிமையின் பிரகடனம்: இயேசுவைக் கண்ட பின், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டே திரும்பி போனார்கள். அதோடு நில்லாமல், அவர்கள் கேட்டதும் கண்டதுமான காரியங்களை எல்லாருக்கும் அறிவித்தார்கள். பணிந்துகொள்ளுதல் என்பது நாம் மட்டும் அடையும் ஒரு தனிப்பட்ட அனுபவம் அல்ல் அது மற்றவர்களுக்குச் சொல்லும் மகிழ்ச்சியான நற்செய்தியாக மாற வேண்டும்.

☞ வாசிப்பவர்களுக்கான கேள்வி: தேவனுடைய வார்த்தையை (சத்தியத்தை) கேட்டவுடன், நீங்கள் மேய்ப்பர்களைப்போல உடனடியாக செயல்படுகிறீர்களா?

ஆறுதலைக் கண்டடைந்த சிமியோன்: (லூக்கா 2:2532)

சிமியோன் நீதியும், தேவபக்தியும் உள்ள ஒரு மனிதன். அவர் இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. சிமியோன் வாழ்நாள் முழுவதும் காத்திருந்தது, இயேசுவைக் கண்டு அவரைப் பணிந்துகொள்ளவே.

சிமியோனின் பணிந்துகொள்ளுதலின் தனிச்சிறப்பு:

1. தேவபக்தியும் பொறுமையும்: பணிந்துகொள்ளுதல் என்பது ஒரு கணம் அல்ல, அது வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவுக்காகக் காத்திருக்கும் நீதியான வாழ்க்கைமுறை. அவர் கிறிஸ்துவின் வருகைக்காகப் பொறுமையோடு காத்திருந்து, தனது பக்தியைக் காத்துக்கொண்டார்.
2. ஆவியின் ஏவுதல்: பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படியே அவர் தேவாலயத்திற்குள் பிரவேசித்தார். உண்மையான பணிந்துகொள்ளுதல், ஆவியானவரின் வழிநடத்துதலுக்குச் செவி கொடுப்பதாகும்.
3. நிறைவான தரிசனம்: இயேசு பாலகனைத் தன்னுடைய கைகளில் ஏந்திக்கொண்டபோது, “தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்று தேவனை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்தினான். இயேசுவைத் தரிசிப்பதே ஒரு விசுவாசிக்குக் கிடைக்கும் மிகப் பெரிய நிறைவு.

உபவாசத்தோடு ஆராதித்த அன்னாள்: (லூக்கா 2 : 3638)

அன்னாள் ஒரு தீர்க்கதரிசி. அவளுடைய நிலைப்பாடு சிமியோனை விடவும் மிக ஆழமானது. அவள் தன் 84 வயதிலும், கணவனை இழந்த பின்னரும், தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தாள். அன்னாள் காட்டிய

பணிந்துகொள்ளுதலின் மாதிரி:

1. நிலையான ஆராதனை: தேவாலயத்தை விட்டு நீங்காமல் என்பது, உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தேவ பிரசன்னத்திலேயே நிலைத்திருப்பதைக் காட்டுகிறது. பணிந்துகொள்ளுதல் என்பது நமது நேரத்தையும் வாழ்வையும் தேவனுக்கே அர்ப்பணிப்பதாகும்.
2. தியாகமுள்ள பக்தி: உபவாசத்தோடும் ஜெபத்தோடும் ஆராதிப்பது, தியாகத்தின் ஊடாக தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டுகிறது. தனது சரீர இச்சைகளையும், உலக இன்பங்களையும் மறுத்து, ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்துகிற பணிவு இது.
3. மீட்பரின் அறிவிப்பு: இயேசு பாலகனைக் கண்ட பிறகு, அன்னாளின் ஆராதனை

தேவாலயத்திற்குள்ளேயே நின்றுவிடவில்லை. அவள் எருசலேமில் மீட்புண்டாக காத்திருந்த அனைவருக்கும் இயேசு தான் மீட்பர் என்பதை அறிவித்தாள். பணிந்துகொள்ளுதல் நம்மை ஊழியப்பாதைக்கு நடத்துகிறது.

ராஜாவை அங்கீகரித்த சாஸ்திரிகள்: (மத்தேயு 2:112)

சாஸ்திரிகள் வெகு தூர தேசத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் இயேசுவின் பிறப்பு ஒரு சாதாரண நிகழ்வு அல்ல, அது ராஜாவுக்குரிய பிறப்பு என்பதை அங்கீகரித்து அவரைப் பணிந்துகொள்ள வந்தார்கள்.

சாஸ்திரிகளின் பணிந்துகொள்ளுதலின் தனிச்சிறப்பு:

1. அங்கீகாரமும் தேடலும்: இயேசுவைப் பணிந்துகொள்ளுதல் என்றால், அவர் உலகத்தின் ராஜாதி ராஜா என்பதை அறிக்கை செய்வது. அவர்கள் ஒரு சாதாரண குழந்தையைத் தேடவில்லை; ராஜாதி ராஜாவைப் பணிந்துகொள்ள வந்தார்கள்.
2. சாஷ்டாங்கமாய் விழுந்து: அவர்கள் ராஜ மரியாதையின் உச்சமாக, சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்து கொண்டார்கள். பணிந்துகொள்ளுதல் என்பது நம்முடைய சுயத்தை முழுவதுமாகத் தாழ்த்தி, அவருக்கு முன்பாக நம்மை ஒன்றும் இல்லாதவர்கள் என்று அறிக்கை செய்வதாகும்.
3. காணிக்கை: சாஸ்திரிகள் பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் ஆகியவற்றை

காணிக்கையாகச் சமர்ப்பித்தனர்.

» பொன் (Gold) ராஜத்துவத்தை (Kingship)அங்கீகரித்தல்.
» தூபவர்க்கம் (Frankincense): தேவத்துவத்தை (Deity) அங்கீகரித்தல்.
» வெள்ளைப்போளம் (Myrrh): மரணத்தை (Sacrifice) அங்கீகரித்தல்.
» உண்மையான பணிந்துகொள்ளுதல் என்பது நமது சிறந்ததைக் (நேரம், Talent, செல்வம்) கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் செய்வதாகும்.

வல்லமையைக் கண்ட சீஷர்கள் (மத்தேயு 14:33)

இயேசு கடலின் மேல் நடந்து வந்து, காற்றையும் கடலையும் அமைதிப்படுத்திய பின், அவருடைய சீஷர்கள் அவர் முன் பணிந்தார்கள். “அப்பொழுது படவிலிருந்தவர்கள் வந்து: மெய்யாகவே

நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்’’ மத்தேயு 14:33

உலகத்தின் சிருஷ்டிப்பின் மீது இயேசு கொண்டிருந்த வல்லமையைக் கண்டபோது, சீஷர்கள் வார்த்தையால் மட்டுமல்லாமல், சரீரத்தாலும் அவரைத் தொழுது கொண்டார்கள். இயேசுவைப் பணிந்துகொள்ளுதல் என்பது, நம்முடைய சூழ்நிலைகளுக்கு மேலான அவருடைய சர்வ வல்லமையின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதாகும்.

மரணத்தின் மேல் வெற்றி: உயிர்த்தெழுதலுக்குப் பின் (மத்தேயு 28:9)

இயேசு மரித்து அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இந்த உயிர்த்தெழுதலுக்குப் பின், பெண்கள் மற்றும் சீஷர்கள் அவரைச் சந்தித்த போது, அவருடைய தெய்வீக வல்லமையை முழுமையாக உணர்ந்து பணிந்தார்கள்.

‘‘அப்பொழுது அவர்கள் கிட்டவந்து, அவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, அவரைப் பணிந்துகொண்டார்கள்’’ மத்தேயு 28:9

மரணத்தை ஜெயித்த ராஜாவைப் பணிந்துகொள்வது, நம்முடைய விசுவாசத்தின் உச்சக்கட்டமாகும். அது அவர் மட்டுமே நம்மை நித்திய ஜீவனுக்குள் நடத்த முடியும் என்ற முழுமையான உறுதியைக் காட்டுகிறது.

3. பணிந்துகொள்ளுதலின் ஆறு சிறப்பம்சங்கள்: வாழ்வின் அர்ப்பணம்

இயேசுவைப் பணிந்துகொள்ளுதல் என்பது ஒருநாள் நிகழ்வு அல்ல் அது தினசரி வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய ஆறு முக்கிய அம்சங்களைக் கொண்ட ஒரு முழுமையான வாழ்க்கைமுறை ஆகும்.

1. இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடுதல்

‘‘;இயேசுவை கர்த்தர் என்று அறிக்கைப்பண்ணி, விசுவாசித்து, முழு உள்ளத்தோடு அவருக்கு ஆராதனை செய்வது…’’

நம்முடைய ஒவ்வொரு முடிவிலும், பேச்சிலும், செயலிலும் இயேசுவே கர்த்தர் என்பதைநிலைநாட்டுவதே இந்த அர்ப்பணம். நாம் ஆலயத்தில் ஆராதித்தாலும், எந்த சூழ்நிலையில் நின்றாலும், நம்முடைய ஆராதனை முழுமையும் அவர் ஒருவருக்கே உரியது. இது உதட்டினால் செய்யும் ஆராதனை அல்ல் அது முழு ஆவியோடும் உண்மையோடும் செய்யும் ஆராதனை (யோவான் 4:24).

2. கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல்

‘‘இயேசு கூறிய கற்பனைகளைக் கைக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிவது…’’

இயேசு, ‘‘என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான’’ (யோவான் 14:21) என்று கூறினார். பணிந்துகொள்ளுதல் என்பது வெறும் உணர்ச்சிவசப்பட்ட பக்தி அல்ல, மாறாக, அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் நாம் கடைப்பிடிப்பதன் மூலம் நம்முடைய அன்பையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துவதாகும். இது நீதி, நேர்மை, அன்பு ஆகியவற்றை நம்முடைய அன்றாட வாழ்வில் பிரதிபலிப்பதாகும்.

3. முழு அர்ப்பணம்

"';இயேசுவுக்கு நம்மை அர்ப்பணிப்பது..." நாம் அவருக்கு நம்மை அர்ப்பணிப்பது என்பது, நம்முடைய சொந்த ஆசைகள், கனவுகள், திட்டங்கள் எல்லாவற்றையும் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதாகும். "நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலாத்தியர் 2:20) என்ற மனப்பான்மையே இந்த அர்ப்பணத்தின் சாரம். நாம் நமது வேலை, குடும்பம், ஓய்வு என அனைத்திலும் அவரே முதன்மையானவர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

4. நன்றியுடன் ஸ்தோத்திரம் செய்தல்

"';இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவரை ஸ்தோத்திரித்து, துதித்து மகிமைப்படுத்துவது..." எந்த சூழ்நிலையிலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லும் மனப்பான்மை
பணிந்துகொள்ளுதலின் ஒரு பகுதியாகும். நாம் சந்தோஷமாக இருக்கும்போது மட்டுமல்ல, சவால்களை எதிர்கொள்ளும்போதும் அவர் மீது நம்பிக்கை வைத்து, அவர் செய்த எல்லாவற்றிற்காகவும் அவரைத் துதித்து மகிமைப்படுத்துவதே உண்மையான அர்ப்பணமாகும். இந்த நன்றி மனமே நம்மை அவர் பாதத்தில் தாழ்த்துகிறது.

5. இயேசுவை உலகத்திற்குப் பிரசித்தப்படுத்துதல்

"';இயேசுவை இந்த உலகத்திற்குப் பிரசித்தம் பண்ணுவது..." இயேசுவைப் பணிந்து கொண்ட மேய்ப்பர்கள், அன்னாள், சாஸ்திரிகள் அனைவருமே அவருடைய வருகையை மக்களுக்கு அறிவித்தார்கள். பணிந்துகொள்ளுதல் என்பது, இரட்சிப்பின் செய்தியை, மற்றவர்கள் இயேசுவை அறியும்படி இருளிலிருக்கும் உலகத்திற்கு எடுத்துச் செல்வதாகும்.

6. தேவ சித்தம் செய்தல்

"தேவ சித்தம் செய்வது..."

நம்முடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான பணி, தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி நடப்பதாகும். இயேசுவே, "';என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" (லூக்கா 22:42) என்று சொல்லி, பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார். நாம் இயேசுவை எப்படிப் பணிந்து கொள்கிறோம் என்பதன் உச்சபட்ச வெளிப்பாடு, நம்முடைய தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, தேவனுடைய சித்தத்திற்கு முதலிடம் கொடுப்பதாகும்.

4. பணிந்துகொள்ளுதலின் மகத்தான ஆசீர்வாதங்கள்:

நாம் உண்மையாக இயேசுவைப் பணிந்து கொள்ளும்போது, அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, நம்மை முழுமையாக அர்ப்பணிக்கும்போது, நமது வாழ்வில் நான்கு மகத்தான பலன்களை அனுபவிக்கிறோம்.

அ. இரட்சிப்பு மற்றும் பாவ மன்னிப்பு (Salvation and Forgiveness)

இயேசுவின் மேல் விசுவாசம்கொண்டு, அவரைப் பணிந்து, அவரை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால், நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு இரட்சிப்பைப் பெற்று கொள்ளலாம். "';அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை." அப்போஸ்தலர் 4:12

ஆ. தேவனுடைய பிள்ளையாகும் அதிகாரம் (Authority as God's Child)

இயேசுவை விசுவாசித்து, அவரை பணிந்து, ஏற்றுக்கொள்வதன் மூலம் நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்."; யோவான் 1:12

இ. தெய்வீக பாதுகாப்பு (Divine Protection)

சங்கீதம் 91:4 கூறுவதுபோல, "அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார" இயேசுவின் பணிவில் நாம் வரும்போது, உலகத்தின் அச்சுறுத்தல்களும், பிசாசின் சூழ்ச்சிகளும் நம்மைத் தொட முடியாது. நமது வாழ்வின் கர்த்தர் அவரே என்பதால், அவர் நமது பாதுகாப்பு கோட்டையாகவும், அடைக்கலமாகவும் இருக்கிறார். இந்த உலகில் உள்ள எந்த வல்லமைக்கும் மேலான அதிகாரத்தின் கீழ் நாம் இருக்கிறோம் என்ற பூரண சமாதானம் நமக்குக் கிடைக்கிறது.

ஈ. ஆவிக்குரிய அதிகாரம் (Spiritual Authority)

நாம் இயேசுவைப் பணிந்து கொள்ளும்போது, அவருடைய நாமம் நமக்கு ஆவிக்குரிய அதிகாரத்தைத் தருகிறது. பிலிப்பியர் 2:11ன் மகத்துவத்தின்படி, எல்லா முழங்கால்களும் இயேசுவின் நாமத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். நாம் அவருடைய நாமத்தில் ஜெபிக்கும்போது, வியாதி நீங்குகிறது, வல்லமையற்ற நிலை மாறுகிறது, பாவத்தின் சங்கிலிகள் உடைக்கப்படுகின்றன. பணிந்துகொள்ளுதல், நமக்குச் சலுகைகளைக் கொடுப்பதில்லை, மாறாக, இயேசுவின் இராஜ்யத்தின் வல்லமையைத் திறந்துவிடுகிறது.

உ. பூரண சமாதானம் (Perfect Peace)

அவர் நமது பாரங்களைச் சுமப்பவராயிருக்கிறார். நாம் நம்முடைய சொந்த வழிகளில் போராடுவதை விட்டுவிட்டு, அவருடைய கரங்களில் நம்மைப் பணிந்து அர்ப்பணிக்கும்போது, "உலகம் கொடுக்கிற சமாதானம் அல்ல, நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 14:27) என்று அவர் அளித்த பூரண சமாதானத்தை நாம் அனுபவிக்கிறோம். பொறுப்பை அவரிடம் கொடுக்கும்போது, நம்முடைய கவலைகள் விலகி, நம்முடைய இருதயம் நிம்மதி அடைகிறது.

ஊ. நித்திய வாழ்வின் நிச்சயம் (Assurance of Eternal Life)

ஆவியோடும் உண்மையோடும் இயேசுவைப் பணிந்து கொள்ளுகிற அவருடைய சொந்த பிள்ளைகள் (பரிசுத்தவான்கள்) அவருடைய வருகையின்போது, நித்திய ஜீவனை அடைந்து, தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பார்கள்.
"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். " மத்தேயு 25:34

முடிவுரை:

இயேசுவை மட்டுமே பணிவோம்

கிறிஸ்துவின் பிறப்பு என்பது தேவன் மனுஷனான மகத்தான அர்ப்பணம். அவர் தம்மைத் தாழ்த்தி, சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்ததினால், இப்பொழுது எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைப் பெற்றிருக்கிறார். மேய்ப்பர்கள் விரைந்து வந்து பணிந்ததுபோல, சிமியோன் பொறுமையுடன் காத்திருந்து துதித்ததுபோல, அன்னாள் தியாகத்தோடு ஆராதித்ததுபோல, சாஸ்திரிகள் தங்கள் சிறந்ததைக்

காணிக்கையாக்கி ராஜாவைப் பணிந்ததுபோல, நாமும் இயேசுவை மட்டுமே பணிந்து கொள்வோம். நம்மை முழுவதுமாக, மனப்பூர்வமாக, கீழ்ப்படிதலோடு அவருக்கு அர்ப்பணிப்போம். உங்களுடைய எண்ணங்கள், உங்களுடைய திட்டங்கள், உங்களுடைய திறமைகள், உங்களுடைய பொருள்கள் இவை அனைத்திலும் அவரே கர்த்தர் என்று பிரகடனம் செய்து, அவருக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து, உண்மையான மகிழ்ச்சியையும், ஜீவனையும், நித்திய சமாதானத்தையும் கண்டடைவோம். இயேசுவுக்காக நம்மை அர்ப்பணிப்போம்! அவர் மட்டுமே நம் கர்த்தர்! ஆமென்!! அல்லேலூயா!!!

ஆரோக்கியமே ஆசீர்வாதம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழி நம் முன்னோர்களால் அதிகம் உச்சரிக்கப்பட்டதை நம் காதுகள் கேட்டிருக்கும். ஆரோக்கியம் என்பது நம் வாழ்வினின் ஒரு பெரிய ஆசீர்வாதம் என்பதில் ஐயமில்லை.

* இதையே பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் தனக்கு பிரியமான காயுவுக்கு, "பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்'' (3யோவான்:2) என்று எழுதியருள்கிறார்.
* நாம் உண்ணும் உணவு வெறும் வயிற்றை நிரப்புவதாக அல்லாமல் ஊட்டச்சத்து நிறைந்ததாகவும் இருக்கவேண்டியது அவசியம்.
* ஊட்டச்சத்து: உயிர்வாழவும், உடல் வளரவும் தேவையான அத்தியாவசிய இரசாயனப் (வேதி) பொருள். நம் அன்றாட உணவில் 6வகை ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

* **அவை:**

* கார்போஹைட்ரேட்: உடலுக்கு ஆற்றல் தருகிறது.
* புரதங்கள்: உடல் வளர்ச்சி மற்றும் பழுதுபார்த்தல் (செல்).
* நல்ல கொழுப்புகள்: உடலுக்கு ஆற்றல் தருகிறது.
* வைட்டமின்கள்: உடல் ஆரோக்கியம்.
* நார்ச்சத்து: உணவு ஜீரணம்.
* நீர்: உடல் முழுவதும் ஊட்டச்சத்துக்களைக் கொண்டு செல்லவும், கழிவுகளை அகற்றவும்.

குளிர் காலத்திற்கான உணவு முறைகள்

* குளிர் காலத்தில் உடலின் ஆற்றல் அளவு குறைந்து மந்தமான உணர்வு ஏற்படும்.
* அதற்காக உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை சுறுசுறுப்பாக்க வளரும் சிறுவர்கள், உழைக்கும் பெரியவர்கள் மற்றும்

குளிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள்

* குளிர்ச்சியான உணவு, எண்ணெய் அதிகமுள்ள உணவுகள்.
* சர்க்கரை அதிகம் கலந்த உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் துரித உணவுகள்.
* முதியவர்கள் முழுதானியங்கள் தவிர்ப்பது நல்லது.

பரிசுத்த வேதாகமம்

ஆதியாகமம் தொடர்ச்சி..........

அழைப்பு! ஆசீர்வாதம்! ஆபிரகாமின் வழியாய் கிறிஸ்துவுக்குள் வாழ்வு!

“ஆபிராமைத் தெரிந்துகொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவனுக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்ட தேவனாகிய கர்த்தர் நீர்.” நெகேமியா 9:7:

ஆபிராம்

இஸ்ரவேல் ஜனங்களின் தகப்பனான ஆபிரகாம், நோவாவின் மகனான சேமுடைய ஒன்பதாவது தலைமுறையில் ஆபிராம் என்ற பெயரில் தேராகு என்பவருக்கு மகனாகப் பிறந்தார். ஆபிராமின் சகோதரர்கள் நாகோர், ஆரான் என்பவர்கள். அவரது மனைவியின் பெயர் சாராய்.

ஆபிராம் கல்தேயர் நாட்டில் மிகவும் செழிப்பான யூப்ரட்டீஸ் நதியின் சமவெளியில் ஊர் என்ற பட்டணத்தில் வாழ்ந்து வந்தார். இந்தப் பட்டணம் நாகரிகத்தில் மிகவும் வளர்ந்திருந்தாலும், விக்கிரக ஆராதனையால் நிரம்பியிருந்தது. ஆபிராமின் குடும்பம் விக்கிரகங்களைச் செய்தும் அவற்றை வணங்கியும் வந்த ஒரு சூழலில் இருந்தார்கள். இத்தகைய சூழலில்தான், நாம் மேலே கண்ட நெகேமியா 9:7ன் படி, கர்த்தர் ஆபிராமுக்கு தன்னை வெளிப்படுத்தினார். ஆபிராம் என்ற தனி மனிதனைத் தேவன் தனக்கென்று தெரிந்துகொண்டார்.

தேவனின் விசேஷித்த அழைப்பு: புறப்படு!

ஆபிராமைத் தனக்கென்று தெரிந்துகொண்ட தேவன், **ஆபிரகாம்** என்று பெயர் சூட்டி, திரளான ஜனங்களுக்குத் தகப்பனாக மாற்றினார். தேவன் ஆபிரகாம் மூலம் தனக்கென்று ஒரு ஜனக்கூட்டத்தை உருவாக்கினார். அவர்கள் எபிரெயர்கள் என அழைக்கப்பட்டார்கள். இந்த எபிரெய ஜனத்தின் முதல் மனிதனாக ஆபிரகாமைத் தேவன் தெரிந்துகொண்டார்.

தேவன் ஆபிரகாமைப் பார்த்து, “நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுவிட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ” என்று அழைத்தார். இந்த அழைப்பு, பழைய வாழ்க்கையையும் உலக இச்சைகளையும் விட்டுவிட்டு, விசுவாசத்தின் பாதையில் புறப்படும்படி நமக்கும் கொடுக்கப்பட்டுள்ள அழைப்பைப் போன்றது.

வாக்குத்தத்தம்: நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்!

ஆபிரகாமுடைய கீழ்ப்படிதலுக்குப் பதிலாக, தேவன் அவருக்கு ஒரு மகத்தான வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.

“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து,

உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்; உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.”

இந்த வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமின் தனிப்பட்ட வாழ்வோடு மட்டும் தொடர்புடையவை அல்ல. இது உலக வம்சங்கள் அனைவருக்குமான ஓர் ஆசீர்வாதத்தின் கதவைத் திறந்தது.

ஆபிரகாமில் முன்னறிவித்த கிறிஸ்துவே சுவிசேஷம்!

ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தம், உண்மையில் இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைக்கவிருக்கும் சுவிசேஷத்தின் முன்னோட்டமாகும். கலாத்தியர் 3:8ல், அப்போஸ்தலனாகிய பவுல் இதை நமக்கு எடுத்துரைக்கிறார்:

“தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு, உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.”

ஆபிரகாமின் மூலம் உலகத்திற்குக் கிடைக்கவிருந்த ஆசீர்வாதம், இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படும் பாக்கியமேயாகும். இது எல்லா ஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் விலையேறப் பெற்ற சுவிசேஷமாகும்.

இன்று நமக்காய் ஒலிக்கும் அன்பின் அழைப்பு!

ஆபிரகாம் கண்ட கனவு, இப்போது கிறிஸ்துவுக்குள் நமக்காக நிறைவாகியுள்ளது. எபேசியர் 1:3ன் படி: “தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறார்.” தேவன் நமக்கு வாக்குப்பண்ணின இந்த உன்னதமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளும்படி, இயேசு இன்று நம் ஒவ்வொருவரையும் அன்பாய் அழைக்கிறார்.

ஆபிரகாம் தன் தேசத்தை விட்டது போல, நாம் நம்முடைய பாவங்களை விட்டும், உலக இச்சைகளை விட்டும், உலக சிற்றின்பங்களை விட்டும் விலகி, இயேசுவுக்குப் பின்செல்லும்படி அழைக்கப்படுகிறோம். ஏனெனில், ஆபிரகாமைத் தெரிந்துகொண்டவர், நம்மையும் தெரிந்துகொண்டிருக்கிறார்.

சிந்தனைக்கு: நம் பதில் என்ன?

இயேசு நம்மிடம் கூறுவது என்னவென்றால்: “நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்” (யோவான் 15:16). இயேசு கிறிஸ்து நம்மை அவருடைய அன்பின் காரணமாகத் தெரிந்துகொண்டு, விலையேறப் பெற்ற ஆவிக்குரிய ஆசீர்வாதமான ஈவுகளை நமக்குத் தருவதாக வாக்குப்பண்ணி, நம் ஒவ்வொருவரையும் அன்பாய் அழைக்கிறார்.

இந்த ஆழமான அழைப்பைக் குறித்துச் சிந்திப்போம்:

- நாம் இயேசுவின் அழைப்பின் சத்தத்தை உணர்ந்து கொள்கிறோமா?
- இயேசுவுக்காக நம்முடைய உலக ஆசைகளை விட்டுவிடத் தீர்மானம் எடுக்கிறோமா?
- இயேசு கிறிஸ்து நமக்கு வாக்குப்பண்ணியிருக்கும் உன்னதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வாஞ்சிக்கிறோமா?

இயேசு கிறிஸ்து இன்று நம் ஒவ்வொருவருக்கும் அவருடைய அன்பான அழைப்பின் சத்தத்தை உணர்ந்து கொள்ளக்கூடிய இருதயத்தைத் தந்தருளுவாராக! ஆமென்!

குடும்பப் பகுதி

இயேசுவின் குடும்பம்

யோசேப்பும் மரியாளும் கற்றுத்தரும்குடும்பப் பாடங்கள்

டிசம்பர் உற்சாகமும் தேவ திட்டமும்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

டிசம்பர் என்றாலே, பனி விழும் காலையின் இதமான உற்சாகமும், வீடுகளில் ஒளிரும் நட்சத்திரங்களும், மனதை நிரப்பும் கிறிஸ்மஸ் கீதங்களும்தான் நினைவுக்கு வரும். பாலகன் இயேசு நம் குடும்பங்களுக்காகப் பிறந்ததை, நாம் குடும்பமாய் கொண்டாடி மகிழும் இனிய மாதமிது.

தேவன் தம்முடைய உலகளாவிய திட்டத்தை நிறைவேற்ற, உலகத்தின் எந்த ஒரு அரசவையையோ, செல்வந்தர் வீட்டையோ தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக, எளிய, அதேசமயம் தூய்மையும் விசுவாசமும் நிறைந்த ஒரு குடும்பத்தைத் தெரிந்துகொண்டார். ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யோசேப்பு மற்றும் மரியாள் என்ற இளம் தம்பதியிடம், தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டம் எவ்வாறு நிறைவேறியது என்று பார்ப்போம்.

1. தூய்மையின் தாழ்மை: மரியாளின் விசுவாசம்

மரியாள், யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த கன்னிகை. அவர் கிருபை பெற்றவர், ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று தேவ தூதன் கூறினார். மரியாளின் வாழ்க்கையில் நாம் காணும் மிக முக்கியமான குணம், விசுவாசமும் கீழ்ப்படிதலுமே.

> அன்பு, மரியாதை, விசுவாசம் உறவின் அடிப்படை
> நகோமிரூத் உறவைப் போல,
> தேவபக்தி, தியாகம் கொண்டு,
> ஆசீர்வாதமான குடும்பத்தைக் கட்டுங்கள்!

“இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது'' என்று தேவ திட்டத்திற்கு முன்பாக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார். ஒரு சாதாரணப் பெண்ணுக்கு சவாலான, பலத்த பழிச்சொற்களைச் சம்பாதிக்கும் ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டபோதும், அதை மனத்தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டார். தேவனுடைய வார்த்தை தன் வாழ்வில்

நீதியின் கண்ணியத்தைக் காக்க, யோசேப்பைப் பின்பற்றுங்கள்.

நிறைவேறும் என நம்பி, அற்புதம் நடக்கும் வரை காத்திருந்த அந்த விசுவாசமே, ஒரு தேவனுடைய குடும்பத்துக்குரிய முதல் பாடமாகும்.

2. நீதியின் கண்ணியம்: யோசேப்பின் அர்ப்பணிப்பு

யோசேப்பு, மரியாளினுடைய புருஷன். வேதத்தில் அவர் நீதிமான் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய நீதியின் செயல் என்ன தெரியுமா? நியாயப்பிரமாணத்தின்படி, மரியாள் கர்ப்பவதியான விபரம் தெரிந்ததும், அவர் அவளைத் தண்டித்திருக்கலாம் அல்லது அவமானப்படுத்தியிருக்கலாம். ஆனால், நீதிமானாக இருந்தும், அவர் பிறருடைய கண்ணியத்தைப் பாதுகாக்க விரும்பினார்.

மரியாளை அவமானப்படுத்த அவருக்கு மனமில்லை. இந்த மனப்போராட்டத்தின் மத்தியில், தேவ தூதன் மூலம் தேவத்திட்டம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. உடனே, யோசேப்பு தன் சொந்த உணர்வுகளையும், சமூக அழுத்தங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, மரியாளைத் தன் மனைவியாகச் சேர்த்துக்கொண்டார். தியாக மனப்பான்மையும், கீழ்ப்படிதலும் ஒரு புருஷனுக்கு எவ்வளவு அவசியம் என்பதற்கு யோசேப்பு ஒரு முன்மாதிரி!

3. சவாலை சந்தித்த தம்பதி

தேவ மைந்தனைப் பெற்றெடுக்கும் மகத்தான பொறுப்பு அவர்களுக்கு அருளப்பட்டபோது, யோசேப்பும் மரியாளும் புருஷன் மனைவியாக ஒருமித்து தங்கள் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்தார்கள். விசுவாசப் பரீட்சையில் இருவரும் தனித்தனியாக இல்லாமல் சேர்ந்தே பயணித்தார்கள்.

பெத்லகேம் நோக்கிய நீண்ட பயணத்தில், கர்ப்பிணியான தன் மனைவிக்கு யோசேப்பு பாதுகாப்பாக இருந்தார். மரியாளும்கூட, கடினமான சூழ்நிலைகளில் தன் கணவனின் தீர்மானங்களுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உற்ற துணையாக நின்றாள். சத்திரத்தில் இடமில்லை, மாட்டுத் தொழுவம்தான் ஒரே வழி என்ற கடினமான சூழ்நிலை வந்தபோதும், அவர்கள் நிலைகுலந்து போகவில்லை, நொந்து சோர்ந்துவிடவில்லை. பொறுமையோடு அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு, அந்தத் தொழுவத்தையே இயேசுவின் பிறப்புக்கான இடமாக மாற்றினார்கள்.

ஒரு குடும்பம் எவ்வளவு கடினமான சூழ்நிலையிலும், ஒருவர் மற்றவர்மீது சாய்ந்து, விசுவாசத்தில் உறுதியாக நின்றால், அங்கே தேவ சித்தம் நிச்சயம் நிறைவேறும் என்பதை இந்தத் தம்பதி நமக்கு உணர்த்துகிறார்கள்.

விசுவாசப் பயணத்திற்கான 5 குடும்ப ஆலோசனைகள்

யோசேப்பும் மரியாளும் நமக்கு கற்றுத்தந்த பாடங்களை நம்முடைய குடும்ப வாழ்க்கையில் கடைப்பிடிக்க, இதோ சில நடைமுறை ஆலோசனைகள்:

எண்	குடும்பப் பாடம்	நடைமுறை ஆலோசனை
1	அழைப்பை ஒருமித்து ஏற்றுக் கொள்ளுதல்	உங்கள் குடும்பத்திற்கென்று தேவன் வைத்திருக்கும் ஆவிக்குரிய இலக்குகளை (Mission) இருவரும் சேர்ந்து தீர்மானியுங்கள். ஞாயிறு ஆராதனை, ஜெபம், ஊழியம் என அனைத்திலும் ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டி, ஒன்றாகப் பயணிக்க உறுதிபூணுங்கள்.
2	கண்ணியத்தைப் பாதுகாத்தல்	யோசேப்பைப் போல, வாழ்க்கைத் துணையின் பலவீனங்களை பிறரிடம் எடுத்துப் பேசாமல், அவருடைய கண்ணியத்தைக் காக்க உறுதிபூணுதல் அவசியம். குறைகளைக் களைய தனிமையில் ஆலோசனை செய்து, ஒருவர் மற்றவரை நீதிக்கு நேராக வழிநடத்துங்கள்.
3	சவால்களில் துணையாயிருத்தல்	எதிர்பாராத பொருளாதார நெருக்கடி, உடல்நலக் குறைவு அல்லது வேலைப்பளு போன்ற சவாலான காலங்களில், 'நீ மட்டும்' என்று ஒதுக்காமல், 'நாம் சேர்ந்து' என்று ஒருமித்து ஆதரவு தாருங்கள். இருவரும் சேர்ந்து உழைக்கும்போது, எந்த 'மாட்டுத்தொழுவமும்' அரண்மனையாக மாறும்.
4	சத்தத்தைக் கேட்டு செயல்படுதல்	தேவனுடைய வழிகாட்டுதலுக்காக குடும்பமாக முழங்கால் படியிட்டு ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தின் பெரிய முடிவுகள் எதையும் தேவனுடைய சத்தம் இல்லாமல் எடுக்க வேண்டாம்.
5	ஞானமுள்ளோருடன் ஐக்கியம்	மரியாள் எலிசபெத்தை சந்தித்தது போல, நீங்களும் உங்கள் குடும்பமும் பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதத்தை பெற்ற நல்ல, விசுவாசமுள்ள குடும்பங்களுடன் மட்டுமே நட்பை வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில், ஞானிகளோடு சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான் (நீதிமொழிகள் 13:20).

உங்கள் குடும்பத்தின் விசுவாசப் பயணம் சிறக்க, தேவன் தாமே தாமதமின்றி தம்முடைய சித்தத்தை உங்களில் நிறைவேற்றும்படி ஜெபிக்கிறோம். இந்த கிறிஸ்மஸ், உங்கள் குடும்பத்திற்குப் புதிய தொடக்கமாக அமையட்டும்!

போலிச் சிரிப்பும் பின்புறக் கத்தியும்: உறவுகளைப் பூட்டி வைக்கும் கடிவாளம்!

இன்றைய சந்திப்புகளின் நிஜ முகம்

இன்றைய காலத்துப் பெண்கள் அணைக்கும் கரங்களாயும், உழைக்கும் கரங்களாயும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் தங்களுடைய நாவுகளால் உறவுகளை முறிக்கிறார்கள். ஆனால், முன்னோர் காலத்தில் நம் பாட்டிமார்கள் கூடினால் அவர்களின் வார்த்தைகளில் வீட்டின் நன்மைகள், நெல் விளைச்சல், மற்றும் ஊரில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விவாதங்கள் இருக்கும். இன்றைய பெண்கள் கூடினால், அங்கே உறவுகள் நெருக்கமாய் இருந்தாலும் நாக்கின் நெருப்பு பிரிவினையைத் தூண்டுகிறது. பண்டிகைக் கால சந்திப்புகள் ஒருவரின் மகிழ்ச்சியைப் பகிரும் இடமாக இருப்பதை விட அடுத்தவர்களின் குறைகளையும், தனிப்பட்ட இரகசியங்களையும் பேசும் களமாக மாறிவிட்டது. இந்தப் பண்டிகைக் கால சந்திப்புகளில் உறவினர்கள், நண்பர்கள் என்று அனைவரும் கூடுகிறோம். இது மிகவும் அழகான சமயம். ஆனால் அவர்கள் முன்னால் அன்பாக சிரிப்போம். நம் நாவாகிய நெருப்பினால் பின்புறம் அவர்களைப் பற்றி புறம்பேசி இரகசியமாகக் கத்தியை வீசுவோம்.

இன்று போலி சிரிப்பு கலாச்சாரம் தான் நம் சமுதாயப் பெண்களிடம் பரவலாக உள்ளது என்பது கவலைக்குரியது. நாம் மற்றவர்களைப் புன்னகையுடன் கட்டித் தழுவி அன்பை வெளிக்காட்டுகிறோம். ஆனால், அந்த சிரிப்பின் வெப்பம் குறைவதற்குள் நம் நாவுகள் அவர்களின் குறைகளைப் பேசுவதையே சுவைக்க ஆரம்பித்து விடுகிறது.

ஆலயத்துக்குள் வெள்ளைக் கச்சை, வெளியே கரியைப் பூசும் தூரிகையா?

கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின், சபையில் விசுவாசிகளின் தனிப்பட்ட பலவீனங்களையும் பொதுவெளிகளில் குறை சொல்கிறோம். நம் நாவானது தேவனைத் துதித்தும் பாடல்களையும், அதே நேரத்தில் அடுத்தவர்களின் வாழ்க்கையைத் தகர்க்கும் விஷ அம்புகளையும் ஒரே சமயத்தில் உமிழ்கிறது.

கிறிஸ்தவ பெண்களாகிய நம்முடைய நாவுகள் ஆலயத்திற்குள் நுழையும் துவைக்கப்பட்ட வெள்ளைக் கச்சையாகவும், அதே நேரத்தில் அடுத்தவர் குடும்பத்தைத் தகர்க்கும் கரியைப் பூசும் தூரிகையாகவும் ஒரே நேரத்தில் இருக்கக் கூடாது. உள்ளும் புறம்பும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். ஒரு ஊற்றிலிருந்து ஒரே நேரத்தில் கசப்பும் இனிப்பும் வராது. உங்கள் இருதயம் கர்த்தரின் அன்பினால் நிறைந்திருந்தால் உங்கள் வாயிலிருந்து ஆசீர்வாதமேயன்றி புறங்கூறுதல் வராது.

நாவிற்குத் தேவ வார்த்தையாகிய கடிவாளம்!

எனவே யாக்கோபு, நாவை ஒரு குதிரைக்குப் பூட்டப்படும் கடிவாளத்திற்கு ஒப்பிடுகிறார். அத்தனை சக்தி வாய்ந்த ஒரு குதிரையை அடக்கும் கருவி அதின் வாயில் போடப்படும் சிறிய கடிவாளம் தான். அது போல நம்முடைய நாவு மற்றவர்களைக் குறித்து புறம்பேசும்போது நம்

நாவுக்கு தேவனுடைய வார்த்தையாகிய கடிவாளத்தைப் போட்டு கட்டுப்படுத்த வேண்டும்.

ஒருவரைப் பற்றி உங்கள் நாவு குறை பேசும்போது ஜெபிக்க தொடங்குங்கள். பேச வேண்டிய அவசியமில்லாத இடங்களில் அமைதியாக இருக்க பழகுங்கள். தேவ பக்தியுள்ள பெண்கள் சலசலப்புக்கு ஒருபோதும் செவிசாய்க்க கூடாது.

சகோதரிகளே உங்கள் நாவு ஒரு கத்தியை விட கூர்மையானது என்பது உங்களுக்குத் தெரியுமா? அதை நீங்கள் எப்படி பயன்படுத்துகிறீர்கள்? புறங்கூறுதலினால் உறவுகளை அறுக்கிறீர்களா? அல்லது அதைக்கொண்டு உறவுகளை இணைக்கிறீர்களா?

நாவு: ஆயுதமா? ஆசீர்வாதமா?

வேதாகமத்தில் பெண்கள் தங்கள் நாவைப் பயன்படுத்திய விதத்தால் ஒருவர் ஆசீர்வாதமான பெண்மணியாகவும், மற்றொருவர் தண்டனைக்கு உள்ளான பெண்மணியாகவும் மாறினர். இன்றைய வாழ்க்கயல் நீங்கள் யாரைப் போல் இருக்கப் போகிறீர்கள் என்பதைப் பார்ப்போம்.

அபிகாயிலின் ஞானம் (ஆசீர்வாதம்): அபிகாயிலின் வாழ்க்கையானது நாவின் கடிவாளம் எப்படி குடும்பத்தைக் காப்பாற்றும் என்பதற்கான சிறந்த உதாரணம். தன்னுடைய கணவன் இழைத்த தவறுக்காக கோபங்கொள்ளாமல் இக்கட்டான சூழ்நிலையிலும் தன் வார்த்தைகளைக் காத்துக்கொண்டாள். ஞானமான சமாதான வார்த்தைகளையே பேசினாள். தன் கணவன், தாவீதின் கோபத்தைத் தூண்டிவிட்ட போதும், அபிகாயில் தன் நாவால் அதை சிறப்பாகக் கையாண்டாள். எனவே, அவள் நாவு அவளுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்தது.

மிரியாமின் புறங்கூறுதல் (தண்டனை): மோசேயின் சகோதரியான மிரியாம், மோசே ஒரு எத்தியோப்பியப் பெண்ணைத் திருமணம் செய்ததைக் குறித்து ஆரோனுடன் சேர்ந்து புறங்கூறினாள். அவள் வெண் குஷ்டத்தை தண்டனையாகப் பெற்றாள். அவள் தன் நாவைக் கட்டுப்படுத்தத் தவறியதால் தண்டனைக்கு உள்ளானாள்.

உங்கள் வாழ்வே உங்கள் சிறப்பு!

சகோதரிகளே, இன்று நீங்கள் யாருடைய இடத்தைப் பிடித்திருக்கிறீர்கள்? மிரியாமைப் போல புறம்பேசி ஆசீர்வாதத்தை இழக்கப் போகிறீர்களா? இல்லை அபிகாயிலைப் போல ஞானமான சமாதான வார்த்தைகளால் உங்களையும் உங்கள் வீட்டையும் ஆசீர்வதிக்கப் போகிறீர்களா? உங்கள் நாவுதான் உங்கள் வாழ்க்கையின் முக்கியமான பாதுகாப்பு அரண். ஒரு பெண் தன் நாவைக் கட்டுப்படுத்தும்போது, அது தன் குடும்பத்தை மட்டுமல்ல, சபையையும், சமுதாயத்தையும் காப்பாற்றுகிறது.

நாவு: பூந்தோட்டமா? நெருப்புக்காடா?

உங்கள் நாவு ஒரு பூந்தோட்டம் போல.
நல்ல வார்த்தை பேசினால் மலர்கள் மலரும்;
அது உங்கள் வாழ்க்கையை நறுமணமாக்கும்.
ஆனால் புறங்கூறும் நாவு
ஒரு நெருப்புக்காடு.
சிறு வார்த்தை கூட காட்டுத்தீ போல உறவுகளைக் கொளுத்திவிடும்.

அனுதினமும் கிறிஸ்துவுக்குள்

கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு;

“ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்.” யோவான் 3:3

டிசம்பர் மாதம்! உலகமே ஒளிவிழாக்களால் ஜொலிக்கும், இயேசுவின் பிறப்பை நம் இருதயங்களில் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் புனிதமான மாதம். தேவனின் குமாரன் மனிதனாய் நம்முடைய இரட்சிப்புக்காகப் பிறந்ததால்தான், இம்மகிழ்ச்சி சாத்தியமானது. ஆனால், பரிசேயனும், சங்கத்தார் தலைவனுமான நிக்கோதேமுவிடம் இயேசு பேசிய இந்த வசனம், இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவதைவிட மிகவும் ஆழமான ஒரு இரகசியத்தை நம்முள்ளே வைத்துள்ளது. அதுதான் “கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு” என்கிற ஆசீர்வாதம்.

இயேசு உலகத்திற்குள் வந்ததின் நோக்கமே, நாம் மறுபடியும் பிறப்பதற்காகத்தான். நம்முள்ளேயுள்ள பழைய சுபாவம் மரித்து, கிறிஸ்துவின் சுபாவம் உயிர்த்தெழுவதை எப்படி உணர்ந்து கொள்வது?

தெரிந்துகொண்ட தேவன்மேல் பரிசுத்தமாய் அன்புகூறி, பக்தியுள்ள வாழ்வு வாழ, பரிபூரண கிருபை பெறுவீர்!

1. மறுபிறப்பு என்றால் என்ன?

இயேசு நிக்கோதேமுவிடம் பேசுகையில், அவர் உடல் ரீதியான ஒரு பிறப்பைக் குறிக்கவில்லை. “மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.” (யோவான் 3:6) என்று இயேசு தெளிவுபடுத்தினார்.

மறுபிறப்பு என்பது:

பழைய சுபாவத்திற்கு மரணம்: உலக ஆசைகள், சுயநலம், பாவம் ஆகியவற்றால் கட்டுண்டிருந்த பழைய வாழ்க்கைக்கு மனப்பூர்வமாக முற்றுப் புள்ளி வைப்பது. நாம் நம்மை நாமே கிறிஸ்துவின் அரசாட்சிக்கு ஒப்படைப்பது.

கிறிஸ்துவின் ஆவியைப் பெறுதல்: தேவ ஆவியானவர் நம் இருதயத்துக்குள் வந்து, நம்மைப் புதிய சிருஷ்டியாக மாற்றுதல் (2 கொரிந்தியர் 5:17). இதன்மூலம் மனிதனால் இயலாத தேவநீதியை கிறிஸ்துவின் வல்லமையால் நிறைவேற்றுவது.

இது ஒரு மனிதனால் செய்யக்கூடியதல்ல; தேவனின் கிருபையாலும்,

விசுவாசத்தினாலும் மாத்திரமே சாத்தியமாகும்.

2. டிசம்பர் மாதத்தில் நம் மறுபிறப்பு

கிறிஸ்துமஸ், இயேசுவின் பிறப்பை கொண்டாடுகிறது. ஆனால் அவர் ஏன் பிறந்தார்? நாமும் அவரைப் போல மாறவேண்டும், அவருடைய ஆவியைப் பெறவேண்டும் என்பதற்காகவே. தேவனையும் மனுஷனையும் இணைக்கும் பாலமாக இயேசு பிறந்தார்.

- வெளியே இருக்க வேண்டியவர் உள்ளே வருதல்: பெத்லகேம் மாட்டுக்கொட்டிலில் இயேசு பிறந்தது தாழ்மையின் சிகரமாகும். ராஜ்யத்தின் சிங்காசனத்தில் பிறக்கவேண்டியவர், மாட்டுக்கொட்டிலின் இழிவான நிலையைத் தேர்ந்துகொண்டார். அதுபோல, நாமும் நம்முடைய இருதயக் கொட்டிலில் அவருக்காக இடமளிக்க நாம் தயாரா? நம்முடைய பெருமை, சுயநீதி, பழைய வாழ்க்கையையும் தள்ளிவிட்டு கிறிஸ்துவை நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்வதுதான் உண்மையான மறுபிறப்பு.
- கிறிஸ்துவே வாழ்கிறார்: கிறிஸ்துவே வாழ்கிறார்: மறுபடியும்பிறந்த வாழ்க்கையின் உண்மையான இரகசியம்: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.." (கலாத்தியர் 2:20). நமக்காக நாம் வாழாமல், கிறிஸ்துவின் அன்பின் சுபாவத்தை வெளிப்படுத்தி, நம் வாழ்க்கையை வாழ்தல் தான் மறுபிறப்பின் சாட்சி.

3. நமக்குள்ளேயுள்ள கிறிஸ்துவின் சாட்சி

கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு அடைந்த ஒருவனின் வாழ்க்கையில் என்ன மாறுதல்கள் உண்டாகும்?

1. பாவத்தின் மீது வெறுப்பு: முன்பு இன்பமாக இருந்த பாவம், இப்பொழுது வெறுப்பாக மாறும்.
2. அன்பு, தயை, சந்தோஷம்: ஆவியின் கனிகள் (கலாத்தியர் 5:22 23) அவருடைய சுபாவத்தில் வெளிப்படும். கோபம் நீங்கி அமைதி குடிகொள்ளும்; பொறாமை நீங்கி மற்றவர்மேல் அன்பு உண்டாகும்.
3. வேதத்தின் மீது ஆர்வம்: தேவனோடு பேசுவதில், அவருடைய வசனத்தை வாசிப்பதில் சந்தோஷம் உண்டாகும்.
4. ஊழியப்பணியில் ஈடுபாடு: கிறிஸ்து நமக்குள் இருக்கும்போது, நாமும் மற்றவர்களுக்காக வாழத் தொடங்குவோம்.

இந்த டிசம்பர் மாதத்தில், இயேசு பிறந்ததைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? என்று நம்மை நாமே கேள்விகேட்டுக்கொள்வோம். மறுபிறந்த வாழ்க்கையின் மகிமையில், அனுதினமும் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் ஒரு சாட்சியாய் ஒளிவிட, தேவ ஆவியானவர் நம்மை வழிநடத்துவாராக.



ஸ்டெல்லாவின் கிறிஸ்துமஸ் இரவு

“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.” மத்தேயு: 25:40

ஸ்டெல்லாவின் சின்ன குடிசை

ஒரு பெரிய நகரத்தின் சின்ன குடிசைப் பகுதியில், எட்டு வயது ஸ்டெல்லா என்ற சுறுசுறுப்பான சிறுமி இருந்தாள். அவங்க அம்மா ரொம்ப நோயாளி. அவங்க வேலைக்குப் போக முடியலை. அதனால், ஸ்டெல்லாதான் வீட்டைப் பார்த்துக்கொண்டாள்.

கிறிஸ்துமஸ் வரப்போவதால், எல்லா இடமும் விளக்குகளாலும், வண்ண நட்சத்திரங்களாலும் மின்னியது. ஆனால், ஸ்டெல்லா வீட்டுல ஒரு சின்ன மெழுகுவத்தி கூட எரியவில்லை. ரொம்ப இருட்டு!

அன்னைக்குக் கிறிஸ்துமஸ் ஈவ். ஸ்டெல்லாவுக்கு ரொம்பப் பசி, அவங்க அம்மாவுக்குக் கஞ்சி காய்ச்சி கொடுக்கணும். ஆனால், வீட்டுல ஒரு அரிசி மணியும் இல்லை.

பசியுடன் புறப்பட்ட பயணம்

பக்கத்துல இருக்கிற மீனா பாட்டிக்கிட்ட கொஞ்சம் காசு வாங்கலாம்னு ஸ்டெல்லா முடிவெடுத்தா. தன்னோட பழைய ஸ்வெட்டரைப் போட்டுக்கிட்டு வெளியில வந்தா. வெளியில பனிக்காற்று ரொம்பக் குளிர்ச்சி!

மீனா பாட்டி வீட்டுக்குப் போற வழியில, நகரத்தோட பெரிய சர்ச் இருந்துச்சு. அங்க கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் ரொம்பப் பிரமாதமா நடந்துச்சு.

அழகான பாடல்கள், சாக்லேட் மணம், சூடான காபி வாசனை... எல்லாமே ஸ்டெல்லாவைக் கவர்ந்தாலும், உள்ளே போகத் தைரியம் இல்லை. பசியும் அம்மாவின் கவலையும் அவ மனசுக்குள்ள பெரிய பாரமா இருந்துச்சு.

ஆரஞ்சு கேக்கும் அன்பான ஆகாஷும்

திடீர்னு, சர்ச் படிக்கட்டுல ஒரு சின்னப் பையன் உட்கார்ந்து, ஒரு பெரிய ஆரஞ்சு கேக்கைச் சாப்பிட்டுகிட்டு இருந்தான். அவன் பேரு ஆகாஷ்.

ஸ்டெல்லா ஒரு மரத்துக்குப் பின்னால மறைஞ்சு, அவன் சாப்பிடுற கேக்கையே உத்துப் பார்த்தா. ஒரு சின்னத் துண்டாவது கிடைச்சா போதும்னு நினைச்சா.

ஆகாஷ், ஸ்டெல்லாவைப் பார்த்தான். சோகம் நிறைந்த முகம், பழைய உடை, குளிர்ந்த காலணி... இதைப் பார்த்ததும் அவனுக்குள்ள இயேசுவின் ஞானம் ஒரு குரலா ஒலிச்சுச்சு: "பசிச்சவனுக்கு உணவு கொடு. துணையில்லாதவனுக்குத் துணையாக இரு."

உடனே ஆகாஷ், தன் கையில இருந்த பெரிய கேக்கை சமமான ரெண்டு பாதியா உடைச்சான். ஒரு பாதியை ஸ்டெல்லா நின்ன மரத்தடியில வந்து நீட்டினான்.

இயேசுவின் கருணையால் கிடைத்த பரிசு

ஆச்சரியத்துல மெதுவா நடந்து வந்த ஸ்டெல்லா, கேக்கை வாங்கிக்கிட்டா. அந்த ஒரு துண்டு கேக், அவளுக்கு முழு வயிற்றை நிரப்பின மாதிரி ஒரு சந்தோஷத்தைக் கொடுத்துச்சு!

- ஸ்டெல்லா, தன்னோட நிலைமை, அம்மாவுக்கு உடம்பு சரியில்லாதது, வீட்டுல சாப்பாடு இல்லைன்னு எல்லாத்தையும் சொன்னா.
- ஆகாஷ் உடனே, "இன்னைக்கு கிறிஸ்துமஸ் இரவு. இயேசு பிறந்த நாள். வா! நான் உனக்கு உதவி செய்றேன்!"னு சொல்லி, அவளை உள்ளே கூட்டிட்டுப் போனான்.

- அவன் அப்பா (பாஸ்டர்) ஸ்டெல்லாவின் கதையைக் கேட்டு, கண்கள் கலங்கிட்டார்.
- உடனே, சர்ச் விருந்தில் இருந்து சூடான சாப்பாடு, கேக், பழங்கள், புது ஸ்வெட்டர், கிறிஸ்துமஸ் பரிசுப் பொட்டலம் எல்லாத்தையும் ஒரு பெரிய பையில் போட்டு ஸ்டெல்லாகிட்ட கொடுத்தார்.

ஸ்டெல்லாவின் கண்களில் கண்ணீர்! அவங்க அம்மாவுக்கு கஞ்சி காய்ச்ச அரிசி வாங்கப் போகவே வேண்டாம்! சூடான சாப்பாடு இருக்கு!

உண்மையான கிறிஸ்துமஸ் அன்பு

“நன்றி எனக்கு இல்ல, ஸ்டெல்லா. இயேசுவுக்குத்தான். நாமெல்லாம் அவரோட அன்பை மத்தவங்களுக்குக் கொடுக்கணும். அதுதான் நிஜமான கிறிஸ்துமஸ்,” என்று ஆகாஷ் சொன்னான்.

ஸ்டெல்லா, அந்தப் பெரிய பையையும், பரிசையும் எடுத்துக்கிட்டு, சந்தோஷமா வீட்டுக்கு ஓடினா. அன்னைக்கு அவங்க வீட்டுல கிறிஸ்துமஸ் விளக்கு இல்லாம இருக்கலாம், ஆனா இயேசுவின் கருணையால அவங்க வீடு முழுக்கச் சந்தோஷமும், நம்பிக்கையும் நிறைஞ்சு இருந்துச்சு.

நீதி என்ன தெரியுமா குட்டீஸ்?

- நமக்குக் கிடைக்கிற பரிசுகளைவிட, நாம மத்தவங்ககிட்ட பகிர்ந்து கொடுக்கிற அன்புலதான் உண்மையான சந்தோஷம் இருக்கு.
- கஷ்டப்படுறவங்களுக்கு உதவ ஒருபோதும் யோசிக்காதீங்க.
- நீங்க யாருக்காவது ஒரு சின்ன உதவி செஞ்சா கூட, அது நம்ம இயேசப்பாவுக்கே செய்ற மாதிரி பெரிய விஷயம் (மத்தேயு 25:40) என்பதை மறக்காதீங்க.
- இந்த கிறிஸ்துமஸ் வாரத்துல, நீங்க யூஸ் பண்ணாத நல்ல பொம்மைகள ஏழை குழந்தைகளுக்குக் கொடுத்து, உண்மையான கருணையின் வெளிச்சத்தைப் பரப்புங்கள். அப்போதுதான், உங்க மனசும், வீடும் நம்பிக்கையாலும் சந்தோஷத்தாலும் நிரம்பியிருக்கும்!

கண்டுபிடி

படத்தைப் பார்த்து வார்த்தையை எழுதுக

....

....

....

....

....

விடைகளை 8428326459 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கவும்

கேள்வி -பதில்

டிசம்பர் மாத கேள்வி பதில்

1. சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்குவது எது?
   A) ஆவியின் கனி B) பரிசுத்தம் C) அன்பு
2. குடல்கள் இற்று விழும்படி கொடிய வியாதியினால் வாதிக்கப்பட்டது யார்?
   A) யோசபாத் B) ஆசா C) யோராம்
3. பொருளாசையை வெறுக்கிறவன் எதைப் பெறுவான்?
   A) நன்மையை B) ஞானத்தை C) தீர்க்காயுசை
4. மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் யார்?
   A) கொலோசே சபையார் B) தெசலோனிக்கே சபையார்
   C) எபேசு சபையார்
5. யோசியாவின் மேல் புலம்பல் பாடினது யார்?
   A) எரேமியா B) நேகோ C) யோவாகாஸ்
6. சிதேக்கியா ராஜா எந்த தீர்க்கதரிசிக்கு முன்பாக தன்னை தாழ்த்தவில்லை?
   A) ஏசாயா B) எரேமியா C) உல்தாள்
7. யூதாவிலுள்ள எருசலேமிலே தனக்கு ஆலயத்தை கட்டுவிக்க, தேவன் ஏவினதான கோரேஸ் எந்த நாட்டின் ராஜா?
   A) பெர்சியாவின் ராஜா B) யூதாவின் ராஜா
   C) இஸ்ரவேலின் ராஜா
8. சிலர் எதை தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள்?
   A) திருவசனத்தை B) நல் உபதேசத்தை C) நல் மனச்சாட்சியை
9. எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது எது?
   A) பொருளாசை B) பண ஆசை C) மாம்ச சிந்தை
10. லீபனோனைப் போலவும் கேதுருக்களைப் போலவும் சிறப்பாயிருக்கிறது எது?
    A) அவர் கால்கள் B) அவர் ரூபம் C) அவர் கரம்

சென்ற மாத கண்டுபிடியுங்கள் போட்டி விடைகள்

1. ஆசகேல் (2 சாமுவேல் 2:18), 2. சவுல்(அப்போஸ்தலர் 13:9), 3. ஆமால்(1 நாளாகமம் 7:35), 4. ஆத்சேல்(1 நாளாகமம் 8:37), 5. பாகியேல்(எண்ணாகமம் 1:13), 6. யேசபேல்(1 இராஜாக்கள் 18:4), 7. ஆபேல்(ஆதியாகமம் 4:2), 8. பவுல்(அப்போஸ்தலர் 13:9), 9. யாகேல்(நியாயாதிபதிகள் 4:18), 10. யேகியேல்(1 நாளாகமம் 11:44)

கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்" சங்.145:10

சென்ற மாத கேள்வி-பதில் விடைகள்

1. C) புத்தி (நீதிமொழிகள் 4:9), 2. A) மெய்ஞ்ஞானத்தை (நீதிமொழிகள் 2:7)
3. B) உத்தமன் (2 கொரிந்தியர் 10:18), 4. A) யூதா (1 நாளாகமம் 9:1)
5. C) சாந்தகுணம் உள்ளவர்களை (சங்கீதம் 149:4), 6. B) விடுதலை (2 கொரிந்தியர் 3:17)
7. B) நீதியை (2 கொரிந்தியர் 3:9), 8. A) தீத்து (2 கொரிந்தியர் 2:13)
9. C) நல்லொழுக்கங்களை (1 கொரிந்தியர் 15:33), 10. A) நீதிமான் (சங்கீதம் 141:5)

விடுகதை

1. கடன் கொடுக்க தயங்கும் போது கர்த்தருக்கே கடன் கொடுப்பான் கனிவு நிறைந்த மனிதன் இவன். அவன் யார்?
2. ஊமை ஊரை கெடுக்கும், பெருச்சாளி வயலை கெடுக்கும், இவனோ மிகுந்த நன்மையை கெடுப்பான். அவன் யார்?
3. பிறக்காமல் மரணத்தை பார்த்த இரண்டு பேர் யார்? பிறந்தும் மரணத்தை பார்க்காத இரண்டு பேர் யார்?
4. நான் வாயில் இருக்கிறேன். ஆனால் எனக்கு எலும்பில்லை, எனது வார்த்தைகள் உயிரும் மரணமும் ஆகும். நான் யார்?
5. நினைக்கும் பருவம் இதுதான், நடக்கும் பருவம் இதுதான், வாழ்க்கை வாழ்வதற்கே எண்ணம் எட்டிப் பார்க்கும் பருவம், கணக்கு கொடுக்க வேண்டியதை கணித்து சொல்லும் பருவம். அது என்ன?

குறிப்பு:

1. விடைகளை ஒவ்வொரு மாதமும் 15ந் தேதிக்குள் 8428326459 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கவும்

கடந்த மாத கேள்விகளுக்கு விடை எழுதியவர்கள்

Malavilai:
R. Viji
Sheela
Praislin sharo
I. Ibiya
Ashlin
Adlin
J. J. Jinto
J. J. Jifna
J. Ashbia Jefi
Jovita
Jovin
A. Vijilda Mary
S. H. Abisha
S. H. Aashmi
B. Jenifer Akshitha
Abitha
Beniga
Jeba shiny
Ashbial jafni
J. C. Jebalin Bershiya
Christal Rani
Rajashobini

Kotticode
Nesheeja
Asbial Leenu
Astrabel Junia
Vimala Bai

Paththukaani
Reena
Riya Blancy

Nagercoil
Betsy
Juan chrish
Priscilla
Julia
Libina kani

Paravakkadu
Rani kamaliel

Thiruvithancode
Dhanya jeni

Chennai
R. Sujin
Beny Grish
Leyal Gracious
Jenibar subha
Christober
Jiji Bai
V. J. Joline

Palliyadi
R. Sahibha

Attoor
Benila

Kulaseharam
Jeba jini

Pulavanvilai
D. Ajisha
P. J. Arshiga Eby
Shakila mebel
E. Rufni
E. Rufus
Elisy Bai
Jebalin johnsy
Daffina jain
Lifna
Akisha jain
Merlin majisha
Merlin jeba
Latha

Vadakkankulam
Uma devi
Prisca
Jasmine christober
Mahiba

Thirparappu
Jeswin Daniel
Jerusha sherin
Akila
Suseela
Jeni sobia
Rishiya

Aanaiady
Rajini

Palapalli
Jiffno

Zionmalai
Bercy
Jenushiya
Sajin jeniba
Subiksha

Poovancode
Usha
Amal raj
Jameetha
Rajini Amal

Muthalar
Bindhu
Johnsy Mary
Jemitha

Kollamcode
Jerfin
Jershlin
Rajina

Kottaravilai
Sana

Puthiyambathur
Mercy

Thiruvattar
Rahul

Kumarapuram
Adline Dhiyaa
Selva Nidhiya

Ambalathu vilai
Jasmine shiny

Mylady
Sathiya Deva

Thoothukudi
Kanisha

Arumanai
Roshan
Jason Reyo
Jaspin jini

Tholady
Kozia
Shyni

Hosur
Epsiba jasmin

Kodungulam
Angel melbiya

Sriperumbudur
Y. Shiny

Kumarankudi
Shenika

Haryana
Preetha
Hepzibah
Gnana selvi

"இருளிலே நடக்கிற ஜனங்கள்
பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்" (ஏசாயா 9:2)

கிறிஸ்துமஸ் பண்டிகையும், வாலிபரின் புதிய வாழ்க்கையும்

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபர்களே!

கிறிஸ்துமஸ் என்பது ஒரு பொழுதுபோக்குக்காக மட்டுமே செய்யப்படும் கொண்டாட்டம் அல்ல; அது தேவன் உங்கள் இருளில் வெளிச்சமாகப் பிறக்க வந்ததின் நினைவு கூரல் ஆகும். நீங்கள் எந்தப் பழக்கத்தில் சிக்கியிருந்தாலும் (மது, போதைப்பொருள், தவறான உறவுகள், இணைய அடிமைத்தனம்), அது உங்களைச் சிறைப்படுத்துகிறது. கிறிஸ்துமஸ் தரும் நம்பிக்கை, அந்தச் சிறையில் இருந்து உங்களுக்கு விடுதலை உண்டு என்பதே!

பாவத்தின் மகிழ்ச்சி தற்காலிகமே: இயேசுவின் சமாதானம் நிரந்தரம்! வாலிபப் பருவத்தில் நாம் செய்யும் தவறுகளைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் எண்ணம் பொதுவானது. ஆனால், உங்கள் பழக்கங்கள் வெறும் "தவறுகள்" அல்ல, அவை உங்கள் ஆத்துமாவின் சமாதானத்தையும், உங்கள் குடும்பத்தின் மகிழ்ச்சியையும் திருடும் நயவஞ்சகமான சக்திகள். தற்காலிக இன்பம் வேண்டாம், நிரந்தர சமாதானமே என் இலக்கு!

அ. உடனடி இன்பத்தின் கவர்ச்சி: தீய பழக்கங்கள் வாலிபப் பருவத்தில் உடனடியாகவும், வலுவாகவும் ஈர்க்கின்றன. ஏனென்றால், அவை தற்காலிகமான பரவசம் மற்றும் ஏற்றுக்கொள்ளும் உணர்வைத் தருவது போல் தோன்றும். ஆனால், அந்த இன்பம் ஒரு பொறி. அது உங்களை வெட்கம், தனிமை, மற்றும் குற்ற உணர்ச்சி என்ற ஆழமான இருளுக்குள் தள்ளிவிடும். இயேசு கொடுக்கும் உண்மையான மகிழ்ச்சி நிலைத்திருக்கும்; அது இந்தப் பொய்த் தேவைகளால் அழிக்க முடியாத சமாதானமாகும்.

ஆ. பண்டிகையின் பாவனை: நீங்கள் ஆலயத்திற்குச் சென்று கரோல் பாடலாம், குடிலைப் பார்க்கலாம், பரிசுகளைப் பரிமாறலாம். ஆனால், நீங்கள் இரகசியமாகத் தீய பழக்கத்தில் மூழ்கியிருந்தால், உங்கள் கொண்டாட்டம் வெறும் பாவனையாக மாறிவிடும். இயேசுவுக்கு வெளியே உள்ள எந்த மகிழ்ச்சியும் உண்மையான மகிழ்ச்சி அல்ல; அது தற்காலிகப் பரவசம் மட்டுமே.

இ. வெளிச்சத்தின் அழைப்பு: கிறிஸ்து பிறந்தபோது உலகம் இருளில் இருந்தது. அவர் வெளிச்சமாக வந்தார். உங்கள் இருண்ட பழக்கங்கள் தான் உங்கள் வாழ்க்கையின் இருள். இந்த வெளிச்சம் உங்கள் வாழ்க்கையிலும் பிரகாசிக்க, நீங்கள் முதலில் உங்கள் பழக்கத்தின் இருப்பை நேர்மையாக ஒப்புக்கொண்டு, அந்தக் கொண்டாட்ட இடத்தை அவர் வெளிச்சத்தினால் நிரப்ப அனுமதிக்க வேண்டும்.

இப்போதே தொடங்கு! நாளை அல்ல, விடுதலை இன்றே!

சபிக்கப்பட்ட பழக்கங்களிலிருந்து வெளியே வருவதற்குத் தயக்கம் கூடாது. மாற்றத்தை அடுத்த மாதம் அல்ல, இப்போதே, இந்தக் கிறிஸ்துமஸ் தயாரிப்பு நாட்களிலேயே தொடங்குங்கள்.

நேர்மையான ஒப்புதல்: உங்கள் தீய பழக்கம் எதுவாக இருந்தாலும், அதை வெறுத்து ஒதுக்குங்கள். “நான் ஒரு அடிமை” என்று ஒப்புக்கொள்வது, விடுதலைக்கான முதல் படியாகும். இது உங்களுக்குள் இருக்கும் போராட்டத்தை நேர்மையுடன் எதிர்கொள்ளும் ஆரம்பம்.

பழக்கத்தின் சூழலைத் தவிருங்கள்: கிறிஸ்துமஸ் விடுமுறைகளில் உங்கள் கெட்ட பழக்கங்களுக்குத் தூண்டுகோலாக இருக்கும் நண்பர்கள், இடங்கள், அல்லது இணையப் பக்கங்களைத் தவிர்க்க உறுதிபூணுங்கள். ஒரு தூண்டுதலை எதிர்கொள்வதை விட, அதை முழுமையாகத் தவிர்ப்பது ஆயிரம் மடங்கு எளிதானது.

ஆலோசனையை நாடுங்கள்: உங்கள் போராட்டம் உங்களுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டியதில்லை. நீங்கள் நம்பும் ஆத்மீக வழிகாட்டியாகிய, தேவ ஊழியக்காரரை நாடுங்கள். அவர்களிடம் உங்கள் இரகசியத்தைப் பகிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கவும், உங்களுக்கு வழிகாட்டவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

தினசரி புதுப்பித்தல்: உங்கள் நாளை ஜெபத்துடனும், வேத வாசிப்புடனும் ஆரம்பியுங்கள். நாள் முழுவதும் கிறிஸ்துவுடன் இணைந்திருக்க நேரம் ஒதுக்குங்கள். உங்கள் மனதைக் கெட்ட சிந்தனைகள் ஆட்கொள்ளும் முன், நல்ல சிந்தனைகளால் நிரப்புவது அவசியம்.

**நீங்கள் இனி தனியாக இல்லை, கிறிஸ்துவும்
அவர் சமூகமும் உங்கள் துணை!**

மாற்றம் என்பது நீங்கள் எடுக்கும் ஒரு துணிச்சலான முடிவு மட்டுமல்ல; அது தொடர்ச்சியான பயணமாகும்.

பொறுப்புணர்வுக்கான நண்பர்: உங்களைச் சரியான பாதையில் வழிநடத்தக்கூடிய, உங்கள் தவறுகளைப் பற்றி நேர்மையாகக் கேட்கக்கூடிய ஒரு பொறுப்புணர்வுடைய ஊழியரைத் தேர்ந்தெடுங்கள். ஒரு இரகசியம் வெளிச்சத்துக்கு வரும்போது, அதன் சக்தி குறையும். இந்தக் கிறிஸ்துமஸ் விடுமுறையில் இதை உங்கள் இலக்காக வையுங்கள்.

தவறுகளைத் தாண்டி முன்னேறுங்கள்: விடுதலைக்கான போராட்டத்தில் சறுக்கல்கள் வரலாம். சறுக்குவது வீழ்ச்சி அல்ல, வீழ்ந்து கிடப்பதே வீழ்ச்சி. ஒருமுறை தவறு நடந்தால் துவண்டு போகாதீர்கள். இயேசுவின் கிருபையை நாடி, உடனடியாக எழுந்து உங்கள் பாதையில் செல்லுங்கள். இந்த கிறிஸ்துமஸ், உங்களை மீண்டும் மீண்டும் தொடங்க






அழைக்கிறது. அவருடைய இரக்கம் தினசரி புதியது.

சிறிய வெற்றிகளைக் கொண்டாடுங்கள்: ஒரே இரவில் அனைத்து பழக்கங்களையும் விட முடியாது. ஒரு நாள், ஒரு வாரம் நீங்கள் அந்தப் பழக்கத்தைத் தவிர்த்தால், அதைக் கொண்டாடுங்கள். தேவன் உங்கள் சிறிய முயற்சிகளையும் காண்கிறார். இந்தச் சிறிய வெற்றிகள் தான் நாளடைவில் பெரிய விடுதலையைக் கொண்டுவரும்.

பழையவனை விடு, புதியவனைக் கொள்!
புதிய சிருஷ்டியே உன் அடையாளம்!

உண்மையான பெயர் மாற்றம்: வாலிபர்களே, உங்கள் தவறு உங்களை “போதை அடிமை” என்றோ, “வீழ்ந்துபோனவன்” என்றோ அழைக்கலாம். ஆனால், இயேசு உங்களைப் பார்த்து, “நான் நேசிக்கும் பிள்ளை,” “விடுதலையானவன்,” “வெளிச்சத்தின் வாரிசு” என்று அழைக்கிறார். உங்கள் கடந்த கால பழக்கங்கள் உங்கள் எதிர்காலத்தை வரையறுக்கத் தேவையில்லை. அவர் உங்கள் வெட்கத்தை விலக்கி, பரிசுத்தத்தின் உடையை அணிவிக்கிறார்.

நான் அடிமை அல்ல! நான் கிறிஸ்துவின் பிள்ளை!

புதிய சிருஷ்டி: வேதம் சொல்கிறது: “ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2 கொரிந்தியர் 5:17). இந்த கிறிஸ்துமஸில், உங்கள் பழைய அடையாளத்தையும், உங்கள் கெட்ட பழக்கங்களையும் பெத்லகேமின் குடிலில் வைத்துவிட்டு, புதிய சிருஷ்டியாக எழுந்து வாருங்கள். உங்கள் மனதில் இருக்கும் குற்ற உணர்ச்சி மற்றும் வெட்கத்தை அவர் சுமந்துவிட்டார். நீங்கள் இப்போது விடுதலைக்குரியவர்கள்.

பெத்லகேம் வாசல்: பழைய வாழ்வுக்கு விடை!

5. ஒரு ஜெபம்: இயேசுவை உங்கள் வாழ்வில் பிறக்கச் செய்யுங்கள்

இயேசு ஒரு குழந்தையாகப் பிறந்தார். அதாவது, அவர் உங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய, தூய்மையான தொடக்கத்தை அளிக்கக் காத்திருக்கிறார்.

“வாலிபர்களே, உன்னுடைய ஒவ்வொரு கெட்ட பழக்கமும் உன்னைச் சங்கிலியால் பிணைத்து வைக்கிறது. ஆனால், வேதம் சொல்கிறது, ‘குமாரன் உங்களை விடுதலையாக்கினால், நீங்கள் மெய்யாகவே விடுதலையாவீர்கள்’ (யோவான் 8:36). கிறிஸ்து உங்கள் விடுதலையை வாங்கிக்கொண்டு வந்துவிட்டார். அவரை உங்கள் இருதயத்தில் பிறக்கச் செய்யுங்கள். இந்தக் கிறிஸ்துமஸை உங்கள் மாற்றத்தின் கொண்டாட்டமாக மாற்றுங்கள்.”



இரத்தசாட்சி பகுதி

கோதுமை மணிகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்போஸ்தலர் தோமா

சேரநாட்டில் கேரளாவிலுள்ள கொடுங்கல்லூரிலிருந்து தக்கலை (தெற்கு எல்லை என்றழைக்கப்பட்டது) இமயவரம்பன் நெடுஞ்சேரல் என்கிற அரசன் ஆண்டு வந்தான். தட்சசீலம் நகரை அரசாண்ட கொந்தபோரஸ் மன்னன் இமயவரம்பனை தன் நாட்டிற்கு சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தான். அந்நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மன்னன் குடும்பத்தினர் மூலமாக அப்போஸ்தலர் தோமாவையும் இயேசு கிறிஸ்துவையும் பற்றி அறிந்திருந்தான். அந்த சேர மன்னனின் அழைப்பை ஏற்று பத்மநாதபுரத்தில் உள்ள இமயவரம்பனின் அரண்மனைக்கு வந்த தோமா அரச குடும்பத்தினருக்கும் அரண்மனையில் பணிவோருக்கும் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிவித்தார்.

அநேக அற்புதங்கள் மூலமாக ஆண்டவருடைய நாமம் மகிமைப்பட்டது. திருவிதாங்கோட்டில் தோமா ஊழியம் செய்ததின் பலனாக அநேகர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டனர். அந்த சமயத்தில் ஜனங்கள் கூடி ஆராதிப்பதற்காக தோமா ஒரு ஆலயத்தை கட்ட விரும்பினார். அரசன் தோமாவின் விருப்பத்தை அறிந்து அதற்கான நிலமும் பொருளுதவியும் செய்தான். இன்றும் காட்சியளிக்கும் அந்த சிற்றாலயம் அரசனுடைய ஆலயம் என்று அர்த்தம் கொள்ளும் ‘அரப்பள்ளி’ என்றழைக்கப்படுகிறது.

சென்னைப் பட்டணத்தில் அப்போஸ்தலர் தோமாவின் ஊழியம்

‘அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறி பிரசங்கித்து வந்தார் பன்னிருவரும் அவருடனே கூட இருந்தார்கள்’ லூக்கா 8:1 என்ற வேத வசனத்தின்படி தென்னிந்தியாவில் தோமாவும் கிராமம் கிராமமாக சென்று கிறிஸ்துவின் ஊழியத்தை நிறைவேற்றினார்.

சென்னையில் தோமா தனது ஊழியத்தை பாமர மக்களிடமிருந்து துவக்கினார். ஊழியத்தின் பாதையில் பயங்கரமான எதிர்ப்புகள் வந்தது. பாடுகளும் பிரச்சினைகளும் அவரை நெருக்கின நேரங்களில் எல்லாம்

தோமா வாழ்ந்த குகையில், கொலைகாரர்களிடமிருந்து அவரைத் தப்புவிக்க அற்புத விதமாக தேவன் உண்டாக்கிய துவாரம்.

அவருக்காக சிலுவையில் உயிர் கொடுத்த இயேசு கிறிஸ்துவை நினைவு கூர்ந்து தைரியமாக ஊழியம் செய்தார். தோமா சின்னமலை என்றழைக்கப்படும் மலையில் உள்ள ஒரு குகையில் தங்கி ஜெபிப்பது வழக்கம். ஒருமுறை தோமா அந்தக் குகையில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது அவரை கொலை செய்வதற்காக அவர் மீது பொறாமை கொண்ட சில கோவில் பூசாரிகள் பயங்கரமான ஆயுதங்களுடன் அங்கு வந்தனர். அந்தக் குகையினுள் நுழைவதற்கு மிக குறுகிய அளவிலான ஒரே வழி மட்டும்தான் இருந்தது. அந்தக் கொலைகார கூட்டத்தினர் “தோமா வெளியே வரும்போது அவரை கொலை செய்து விடலாம்“ என்று எண்ணி குகையின் வெளியே காத்திருந்தனர். ஆனால் தேவனுடைய வல்லமையால் குகையின் மேற்பரப்பில் ஒரு மனிதன் மட்டும் நுழைந்து செல்லும் அளவிற்கு, திடீரென்று ஒரு பெரிய துவாரம் உண்டானது. அப்போது “மேலே ஏறி, அந்த துவாரத்தின் வழியாய் தப்பித்து செல்” என்று சொல்லுகிற கர்த்தரின் குரலைக் கேட்டு உடனே தோமா வெளியே சென்று பகைவர்களின் கண்களுக்கு தப்பினார். தேவ வல்லமையால் அந்தக் குகையில் தோன்றிய அந்த அற்புத துவாரத்தை நாம் இன்றைக்கும் அங்கு காணலாம்.

அப்போஸ்தலர் தோமாவின் இறுதி நாட்கள்

தோமா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தீவிரமாய் பிரசங்கித்த அந்நாட்களில் அங்கு அதிகமாய் காணப்பட்ட பூசாரிகளால் பயங்கரமான எதிர்ப்பு உண்டானது. தோமா ஊழியம் செய்கிற இடங்களிலெல்லாம் பின்தொடர்ந்து அவரை தடுத்தனர். அதிகமதிகமாய் ஆண்டவருடைய நாமம் மகிமைப்பட்டது. ஜனங்கள் அதிகமாய் மூட பழக்கங்களிலிருந்தும், விக்கரக வழிபாடுகளிலிருந்தும், பூசாரிகளை நம்பியிருந்த ஜனங்கள் அவர்களை விட்டு தோமாவினால் கூறப்படும் உபதேசத்திற்கு திரும்பி அவரை பின்பற்றுவதையும், நோயாளிகள், பிசாசு பிடித்தோர் மெய்யான தேவனால் விடுவிக்கப்படுவதையும் கண்ட பூசாரிகள் தோமாவைக் கொலை செய்ய திட்டமிட்டு தொடர்ந்தனர்.

கி.பி. 72ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் தேதி, தோமா சென்னையிலுள்ள ஆலந்தூரில் ஊழியம் செய்து கொண்டிருந்தார். தோமா மீது பொறாமை கொண்ட அந்தக் கொலை வெறி பிடித்த பூசாரிகள் அதைக் கேள்விப்பட்டு அங்கு வந்து தோமாவைத் தாக்கத் தொடங்கினர். தோமா அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள தாம் வழக்கமாக ஜெபிக்கிற பெரிய மலையில் ஏறி கர்த்தரை நோக்கி ஜெபித்து தன்னை அவருடைய கரத்தில் அர்ப்பணித்தார்.

இரத்த சாட்சியாய் மரித்த தோமா

அப்பொழுது மிகுந்த கோபத்துடன் துரத்தி வந்தவர்களில் ஒருவன் ஈட்டியால் தோமாவின் இருதய பகுதிக்கு நேராக குத்தினான். காயப்பட்ட அப்போஸ்தலர் துடிதுடித்து விழுந்தார். தன் ஜீவனைக் கர்த்தருடைய கையில் ஒப்புக் கொடுத்தார். கடைசி வரையும் அநேக இருதயங்களை ஆண்டவருக்காய் ஆயத்தப்படுத்த துடித்துக் கொண்டிருந்த தோமாவின் இருதய துடிப்பு நிரந்தரமாக

அரப்பள்ளி திருவிதாங்கோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோமா மூலமாகக் கட்டப்பட்டு, பின்பு விரிவுபடுத்தப்பட்ட உலகின் மிக பழைமையான ஆலயம்.

நின்று போனது.

கோதுமை மணியாய் விதைக்கப்பட்ட தோமா

“அவரோடு கூட (இயேசுவோடு) மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்” (யோவான் 11:16) என்று உடன் சீஷர்களுக்கு அழைப்பு விடுத்த தோமா கிறிஸ்துவுக்காய், நமது பாரத தேசத்திற்காய் இரத்தம் சிந்தி மரித்தார். அவர் இரத்தம் சிந்தி மரித்த மலை மற்றும் அதை சுற்றியுள்ள இடம் ‘புனித தோமையார் மலை’ (St. Thomas Mount) என்றழைக்கப்படுகிறது. அவருடைய சரீரம் மயிலாப்பூரில் அடக்கம்பண்ணப்பட்டுள்ளது. அதாவது கோதுமை மணியாய் விதைக்கப்பட்டுள்ளது. அதின் மேல் சாந்தோம் ஆலயம் கட்டப்பட்டுள்ளதை நாம் இன்று பார்க்கிறோம்.

கடந்த எட்டு மாதங்களாக தோமாவின் இந்திய நாட்டின் ஊழியத்தை சுருக்கமாய் படித்தறிந்த தேவனுடைய பிள்ளைகளே! 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த உலகத்தில் இரட்சகராக ‘இயேசு கிறிஸ்து’ என்னும் நாமத்தோடு வெளிப்பட்ட நம் மகிமையின் தேவன் அவரோடிருந்த சீஷர்களில் ஒருவரை பாமரர்களும், உலகத்தின் வழிபாடுகளிலும், பிசாசின் அடிமைத்தனத்திலும் மூழ்கியிருந்த இந்திய தேசத்தில் வாழும் கோடி கோடியான ஆத்துமாக்களின் மேலுள்ள அன்பினாலும் இரக்கத்தினாலும் அனுப்பி அந்த அப்போஸ்தலரின் இரத்தம் நம் மண்ணில் சிந்த செய்திருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தாராகிய இயேசு கிறிஸ்து பாவத்தில் வாழ்ந்த நமக்காய் தம்முடைய மகா பரிசுத்தமான சரீரத்தை கிழிக்க ஒப்புக்கொடுத்து தம்முடைய மகா பரிசுத்தமான இரத்தத்தை நமக்காக சிந்தி மகா மகிமையான ஜீவனை நமக்காக கொடுத்த அன்பு எவ்வளவு பெரிது!!! அதற்கீடாய் நாம் என்ன நம் தேவனுக்கு கொடுத்திருக்கிறோம்?

இன்று வாழும் 98 சதவீதம் இந்திய மக்கள் இன்னும் நாம் சொந்தமாக்கிய அந்த தேவனை அறியவில்லையே. அழிந்து கொண்டிருக்கும் இந்த ஆத்துமாக்களுக்காய் உன்னுடைய உத்தரவாதம் என்ன??? உன்னுடைய அழைப்பு என்ன??? தம்முடைய இரத்தத்தை கிரயமாய் கொடுத்து உன்னை மீட்டெடுத்த உன் ஆண்டவருக்கு நீ கொடுக்கும் பரிசு என்ன? சிந்திப்போம்..... கோதுமை மணிகளாய் ஒப்புக் கொடுப்போம்.

ஆமென்! அல்லேலூயா!!

தோமா இரத்த சாட்சியாக மரித்த மலையில் கட்டப்பட்டுள்ள ஆலயம்

சாட்சிகள்

முடியாத அளவுக்கு கஷ்டப்பட்டேன். என் நிலையை அப்பாவிடம் அறிவித்தபின், கர்த்தருடைய ஊழியக்காரர்களும் ஜெபம் செய்தார்கள். கர்த்தர் கிருபை செய்து என் அனைத்து கஷ்டங்களையும் மாற்றி, முழு சுகத்தையும் தந்தார்.

- Sis. ஜெனிஷா J.

எனக்கு சில நாட்களுக்கு முன்பு திடீரென காய்ச்சலும், கடுமையான குளிரும், வாந்தியும் வந்தது. எழுந்து நிற்க கூட முடியாத நிலை ஏற்பட்டது. உடனே கர்த்தருடைய சபையில் ஆத்மீக அப்பாவிடம் அறிவித்தேன்; ஊழியக்காரர்களும் ஜெபம் செய்தார்கள். கர்த்தருடைய கிருபையால் நான் சீக்கிரம் சுகமடைந்தேன்.

ஒரு நாள் ரூமில் ஆகாரம் திறந்து இருந்தது. நான் வெளியே சென்று வந்தபோது, பாம்பு நக்கியது என்று தெரியாமல் அதைச் சாப்பிட்டுவிட்டேன். உடனே கண்களில் மசவி, உடம்பில் நடுக்கம், முழு இரவும் சர்த்தல், தொண்டை புண், தலை சுழற்சி போன்ற கஷ்டங்கள் ஏற்பட்டன. மறுநாள் காலையில் தான் பாம்பைப் பார்த்தோம். மீண்டும் அப்பாவிடம் அறிவித்து, ஜெபம் மேற்கொள்ளப்பட்டபோது கர்த்தர் படிப்படியாக எனைக் குணப்படுத்தினார். இவ்வாறான பல மரணத்துக்கு அருகான நிலைகளில் கூட கர்த்தர் விசேஷமாக என்னைப் பாதுகாத்துள்ளார். அவருடைய கிருபைக்கும், சபையின் ஜெபங்களுக்கும் இதயப்பூர்வமான ஸ்தோத்திரம்!

- M. மெர்லின் ஷைனா, முதலார்

எனது புருஷனார் வெளிநாட்டில் வேலை செய்துவந்தார். கடந்த வருடம் சில மாதங்கள் வீட்டுக்கு வந்து, மீண்டும் வெளிநாட்டுக்கு செல்லத் திட்டமிட்டார். ஆனால் பல காரணங்களால் பயணத்துக்கு பெரிய தடைகள் ஏற்பட்டதால், ஒரே வருடத்திற்கும் மேலாக காத்திருக்க வேண்டியிருந்தது. முன்னாள் வேலை செய்த கம்பெனியில் மீண்டும் வேலை கிடைக்குமா? கிடைக்காதா? என்ற கவலை நிலவியது.

ஆனால், கர்த்தர் விசேஷமாக கிருபை செய்து, ஆத்மீக அப்பாவினதும் தேவ ஊழியக்காரர்களினதும் ஜெபங்களின் மூலமாக எல்லா தடைகளையும் நீக்கி, அதே கம்பெனியில் வேலை கிடைக்கவும், தேவ பாதுகாப்புடன் வெளிநாட்டுக்கு பயணிக்கவும் அருள்செய்தார். கர்த்தருக்கு மகிமை!

R. MT. முக்கலாம்பாடு

எனக்கு கடந்த 5 வருடங்களாக நாக்கை நீட்ட முடியாமல், இருபுற அலகுகளும் மேல்வாயும் இறுகி, பல் தேய்க்கவும் கஷ்டமாக இருந்தது. மேலும், உடம்பு முழுவதும் ஊரல் காணப்பட்டு, பலமுறை விழுந்ததால் இரண்டு கைப்புயங்களிலும் வீக்கம் மற்றும் வலியும் இருந்தது. ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை (முதலார்) மூன்று நாள் கன்வென்ஷன் ஆராதனையில் கலந்து கொண்டபோது, கர்த்தர் விசேஷமாக தொடுதி, நாக்கு முன்போல சுதந்திரமாக நீட்ட முடியுமாறு குணமளித்தார். உடம்பில் இருந்த ஊரல் கஷ்டமும், கைப்புயங்களில் இருந்த வீக்கமும் வலியும் முற்றிலும் மாறின.

சில ஆண்டுகளுக்கு முன் எனது உடலின் ஒரு பக்கத்தில் கடுமையான நீர்க்கட்டி பிரச்னை இருந்தபோதும், பொதுக்கூட்டத்தில் காத்திருப்பு நேரத்தில் முழுவதும் மாறி நல்ல சுகம் கிடைத்தது.

G. ஜாய்ஸ், முதலார்

ஜெபிப்போம்

உலகளாவிய இயற்கை சீற்றங்கள் மற்றும் விபத்துகள்:
கென்யாவில் நிலச்சரிவு, ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம், வியட்நாமில் கல்மேகி புயல் ஆகியவற்றால் உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளவர்களுக்காக ஜெபிப்போம். மேலும், ஆந்திரப் பிரதேச நெடுஞ் சாலையில் பேருந்து தீ விபத்தில் பலியான 19 பேரின் குடும்பங்களுக்கு ஆறுதல் கிடைக்கவும், சாலைப் பாதுகாப்பு மேம்படவும் நாம் ஜெபம் செய்வோம்.

உள்நாட்டுப் போர்கள், தீவிரவாதம் மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகள்:
சூடான், மேற்கு டார்ஃபூரில் துணை ராணுவப் படையினரின் தாக்குதலுக்குள்ளான எல்பாஷர் மருத்துவமனையில் உயிரிழந்த 460 பேரின் குடும்பங்களுக்காகவும், டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பில் பலியான 15 பேரின் குடும்பங்களுக்காகவும், உலகெங்கிலும் வன்முறை, தீவிரவாதம் நீங்கவும் நிரந்தர அமைதி திரும்பவும் ஜெபிப்போம்.

சுவிசேஷ ஊழிய சவால்கள் மற்றும் விசுவாச சாட்சியம்:
ஜம்முகாஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் கிறிஸ்தவ ஊழியர்கள் மீது மதமாற்றக் குற்றச்சாட்டின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கிலிருந்து ஊழியர்கள் விடுவிக்கப்படவும், அவர்களுக்கு நீதி கிடைக்கவும் ஜெபிப்போம். 2025 ஆம் ஆண்டில் மட்டும் 7,000 நைஜீரிய கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர், சராசரியாக ஒரு நாளைக்கு 35 பேர்.

கிரிக்கெட் வீராங்கனை ஜெமிமா ரோட்ரிக்ஸ் போன்ற இளம் சாதனையாளர்கள் பொது தளங்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தைரியமாகத் துதித்து சாட்சி பகரவும், அநேக வாலிபர்கள் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும் ஜெபம் செய்வோம்.

சபை மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக ஜெபம் செய்வோம்
சென்னை ஆவிக்குரிய கன்வென்ஷன் கூட்டங்கள்: ஜனவரி 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கும் சென்னை கிளை சபையின் ஆவிக்குரிய கன்வென்ஷன் கூட்டங்களுக்காக ஜெபிப்போம். எல்லா தடைகளும் நீங்கி இந்தக் கூட்டங்கள் மூலம் பெரிய எழுப்புதலை ஆண்டவர் கொண்டுவரவும், அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபம் செய்வோம்.

சபை, ஊழியம் மற்றும் ஊழியக்காரர்களுக்காக:
சபைக்காகவும், முன்மாரி பின்மாரி மழைக்காகவும், நம்முடைய ஆத்மீகத் தந்தை மற்றும் எல்லா ஊழியக்காரர்களின் சுகபெலன், தீர்க்காயுசுக்காகவும், புதிய ஊழியக்காரர்கள் எழுப்பப்படவும், அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட மற்றும் அநேக சுவிசேஷ வாசல்கள் திறக்கப்படவும் ஜெபம் பண்ணுவோம்.

சபையின் நிதி மற்றும் கட்டுமான தேவைகளுக்காக:
நடந்து வரும் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான அனைத்து நிதி ஆதாரங்களும் தடையின்றி கிடைக்கவும், சபையின் அனைத்து கடன் பாரங்களும் முழுவதுமாக நீங்க நாம் ஜெபம் செய்வோம்.

சகலவித நோயாளிகள், ஏழைகளுக்காக:
சகலவித நோயாளிகள், பிசாசின் போராட்டத்தினால் காணப்படுகிற ஜனங்கள், திக்கற்ற பிள்ளைகள், ஏழைகள், விதவைகள் மற்றும் ஆதரவற்றோருக்காக ஜெபம் பண்ணுவோம்.

குழந்தைகள் மற்றும் வாலிபர்களுக்காக:
குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்படியாகவும், வாலிப பிள்ளைகளின் இரட்சிப்புக்காகவும், தேவ அழைப்பு பெற்ற எல்லா வாலிப பிள்ளைகளும் விசுவாசத்துடன் தேவ சித்தம் செய்யும்படியாகவும் ஜெபம் பண்ணுவோம்.

ஓராண்டில் வேதாகமம் வாசித்து முடிக்க - டிசம்பர் மாதம்

☐	01	1 இராஜாக்கள் 6	1 இராஜாக்கள் 6	உன்னதப்பாட்டு 6
☐	02	1 இராஜாக்கள் 7	1 இராஜாக்கள் 7	உன்னதப்பாட்டு 7
☐	03	1 இராஜாக்கள் 8	1 இராஜாக்கள் 8	உன்னதப்பாட்டு 8
☐	04	1 இராஜாக்கள் 9	1 இராஜாக்கள் 9	ஏசாயா 1
☐	05	1 இராஜாக்கள் 10	1 இராஜாக்கள் 10	ஏசாயா 2
☐	06	1 இராஜாக்கள் 11	1 இராஜாக்கள் 11	ஏசாயா 3
☐	07	1 இராஜாக்கள் 12	1 இராஜாக்கள் 12	ஏசாயா 4
☐	08	1 இராஜாக்கள் 13	1 இராஜாக்கள் 13	ஏசாயா 5
☐	09	1 இராஜாக்கள் 14	1 இராஜாக்கள் 14	ஏசாயா 6
☐	10	1 இராஜாக்கள் 15	1 இராஜாக்கள் 15	ஏசாயா 7
☐	11	1 இராஜாக்கள் 16	1 இராஜாக்கள் 16	ஏசாயா 8
☐	12	1 இராஜாக்கள் 17	1 இராஜாக்கள் 17	ஏசாயா 9
☐	13	1 இராஜாக்கள் 18	1 இராஜாக்கள் 18	ஏசாயா 10
☐	14	1 இராஜாக்கள் 19	1 இராஜாக்கள் 19	ஏசாயா 11
☐	15	1 இராஜாக்கள் 20	1 இராஜாக்கள் 20	ஏசாயா 12
☐	16	1 இராஜாக்கள் 21	1 இராஜாக்கள் 21	ஏசாயா 13
☐	17	1 இராஜாக்கள் 22	1 இராஜாக்கள் 22	ஏசாயா 14
☐	18	2 இராஜாக்கள் 1	2 இராஜாக்கள் 1	ஏசாயா 15
☐	19	2 இராஜாக்கள் 2	2 இராஜாக்கள் 2	ஏசாயா 16
☐	20	2 இராஜாக்கள் 3	2 இராஜாக்கள் 3	ஏசாயா 17
☐	21	2 இராஜாக்கள் 4	2 இராஜாக்கள் 4	ஏசாயா 18
☐	22	2 இராஜாக்கள் 5	2 இராஜாக்கள் 5	ஏசாயா 19
☐	23	2 இராஜாக்கள் 6	2 இராஜாக்கள் 6	ஏசாயா 20
☐	24	2 இராஜாக்கள் 7	2 இராஜாக்கள் 7	ஏசாயா 21
☐	25	2 இராஜாக்கள் 8	2 இராஜாக்கள் 8	ஏசாயா 22
☐	26	2 இராஜாக்கள் 9	2 இராஜாக்கள் 9	ஏசாயா 23
☐	27	2 இராஜாக்கள் 10	2 இராஜாக்கள் 10	ஏசாயா 24
☐	28	2 இராஜாக்கள் 11	2 இராஜாக்கள் 11	ஏசாயா 25
☐	29	2 இராஜாக்கள் 12	2 இராஜாக்கள் 12	ஏசாயா 26
☐	30	2 இராஜாக்கள் 13	2 இராஜாக்கள் 13	ஏசாயா 27
☐	31	2 இராஜாக்கள் 14	2 இராஜாக்கள் 14	ஏசாயா 28

வாட்ஸ்அப் எண்ணிற்கு (8428326459) போட்டோ எடுத்து அனுப்பவும்

சீயோன்மலை கிளை சபை

ஆவிக்குரிய கன்வென்ஷன் கூட்டங்கள்



கிறிஸ்து பிறப்பு பஜனை

கர்த்தரின் பெரிதான கிருபையினால், எல்லா நாடுகளிலும்
உள்ள விசுவாசிகள் இணைந்து ஜெபிக்கவும், ஆராதிக்கவும்,

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 11:30 IST
ஞாயிற்றுக்கிழமையும் காலை 6:00 IST மணிக்கு

Global Online Worship

நடைபெறும். ZOOM Meet மூலம் நடைபெறும் ஆராதனைக்கு உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் அன்புடன் வரவேற்கிறோம்.
தொடர்புக்கு: 8438236459

பரிசுத்த வேதபாட ஆசிரியர் கூடுகை

குமரன்குடி கம்யூனிட்டி ஹால்

Date
டிசம்பர் 6, சனிக்கிழமை

Time
காலை 9 மணி முதல் 1 மணி வரை

அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்

கிறிஸ்து பிறப்பு பஜனை நிறைவு நாள்

இடம்: மலவிளை
டிசம்பர் 20, சனிக்கிழமை

தொடர்புக்கு :

ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை,
ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை மலவிளை சாலை, செருப்பாலூர் அஞ்சல் - 629162
கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

www.bptc.org spiritual@bptchurch
bptcmalavilai@gmail.com
BPT Church, Malavilai OFFICIAL
+91 8428326459